"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி - 2003



## ஸ்ரீ மேருபுரம் மஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

Walthamstow - London

## Inside :-

***WIN** - Valuable prizes for kids !* (see page: 35) ***Story of Murugan in Colour! All about Pongal & Sivarathri! The power of Manthras & Much More !***

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


Royal
Jewelry
ரோயல் ஜுவல்லரி
* மனம் கவரும் தங்க நகைகள்
*தங்கம் - கரட் உத்தரவாதம்
*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
*உங்கள் தேவைகளுக்கேற்ற
வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய்
தயாரிக்கும் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து
கொடுக்கப்படும்
புன்னகைக்கு நிகர்
எங்கள் பொன்னகையன்றோ!
வாருங்கள் வந்து பார்த்து
வாங்குங்கள்!!
287, High Street North , East Ham,
Manor Park, London E12 6SL
Tel: 0208 472 5500

மணி 11 **கலசம்** ஒலி 41
**KALASAM**
www.smsuk.org.uk E-mail: kalasam@hotmail.com
kalasamsms@yahoo.co.uk

## ஞாயிறா திங்களா?

2002 ஆம் ஆண்டுத் தீபாவளிப் பண்டிகை சைவர்கள் மத்தியில், குறிப்பாகப் புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. தமது கணிப்பே சரியானது என அடம்பிடிக்கும் பஞ்சாங்கக் கணிப்பீட்டாளர்கள் இருசாரர், ஒன்றுக்கு இரண்டு என இருந்தால் நன்மை தானே என இரண்டு நாட்களிலும் விசேட பூசைகளை நடாத்திய ஆலயங்கள் சில, ஏன் இந்த வருடம் இரண்டு தீபாவளிகள் என்று கேட்கும் குழந்தைகள், இவர்களுக்குப் பதில் சொல்லமுடியாத பெற்றோர்கள் எனக் கழிந்தது தீபாவளி. இருளகன்று ஒளி விளங்கவேண்டிய நாளாகக் கொண்டாட வேண்டிய பண்டிகை ஒரு குழப்ப இருளால் மங்கியது ஏன்? இவ்வருடத் தைப் பொங்கலும் இதே நிலைக்குள்ளாகும் என்றே தோன்றுகின்றது.

ஆண்டவனின் பெயராலே கொண்டாடப்படும் பண்டிகைகளில் இப்படியாகக் குழப்பநிலை தோன்றுவதற்குக் காரணம் பஞ்சாங்கக் கணிதர்களும் ஆலயங்களும் ஒரு அடிப்படை உண்மையை ஏற்றுக்கொள்ளத் தவறுவதே. இரு தரப்பினரின் கணிப்பில் ஒருவரது கணிப்பே சரியாக இருக்கமுடியும் என்பதே அவ்வுண்மை.

எனவே, தத்தமது பண்டிகை நாட்களைப் பிரசுரிக்கு முன் இவர்கள் விசேடதினங்களைப் பரிமாற்றம் செய்து இணக்கப்பாடற்ற தினங்களை பற்றிக் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்தை அடையவேண்டும். தமது வாதப்பிரதிவாதங்களால் இணக்கப்பாடு காணமுடியாதவிடத்து இரு சாரரும் ஆண்டவன் தீர்ப்பை ஏற்கச் சம்மதிக்கவேண்டும். ஆண்டவன் சந்நிதியில் பூக்கட்டிவைத்துப் பார்த்தோ அல்லது வேறுமுறையிலோ ஒரே தீர்மானத்தை அடைந்து இருசாரரும் அதை ஏற்றுத் தமது பிரசுரங்களில் மக்களுக்கு அறிவிக்க வேண்டும். பஞ்சாங்க, நாட்காட்டி பிரசுரர்களும் இதையே வலியுறுத்த வேண்டும்.

கண் மூடித்தனத்தினாலோ அல்லது வர்த்தகக் காரணங்களுக்காக இவர்கள் இதனைச் செய்யத் தவறினால் சைவத்தின் காப்பாளர்களாகக் கருதப்படும் சைவ ஆதீனங்கள் ஒருங்கிணைந்து இதில் தெளிவான, முடிவான அறிக்கையை மக்களுக்கு அறிவித்துக் குழப்பத்தைத் தவிர்க்கவேண்டும். இப்பணியில் கலசம் தன் பூரண பங்கை வழங்கத் தயாராக இருக்கிறது.

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு. ந. நவநீதராசா, திரு.வ.இ.இராமநாதன் திரு.சிவ.அசோகன், திரு.ந.சிவராசன், திரு.சு.வைத்தியநாதன், திரு.செ..தர்மலிங்கம், திரு.ச.யோகநாதன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி திரு.சி. தம்பு

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

உ

Aum sakthi

# ஸ்ரீ மேருபுரம் மஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

**SRI MERUPURAM**

***MAHA PATHIRAKALI AMMAN THEVASTHANAM***

**271 Forest Road, Walthamstow E17 6HD**

**Tel / Fax: 020 8531 0872**

**ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்க**
**காத்தாளை அங்கையில் பாசங்குசமும் கரும்பு வில்லும்**
**சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே**

விரிந்த புனலை ஆடையாக உடுத்திருப்பவளும், நிலவுலகின் கண்ணே எண்ணற்கரிய பிறவியினை எடுத்து ஆறறிவு ஓம்பப்பெற்ற மானிடப் பிறவி எடுத்து, இப்பூவுலகின் நீர்வளமும், நிலவளமும், பனிபடர்ந்த வானத்தின் இயற்கை அழகும் ஆன்மிகம், தமிழ் கலை கலாச்சாரம் நிறைந்த பொன் விளையும் புண்ணிய பூமியாம் ஐரோப்பா கண்டத்தில், சிகரமணி என விளங்கும் இலண்டன்

மாநகரின் பூர்வதிக்பால் அமைந்துள்ள வோல்த்தம்ஸ்ரோ நகரில் பொரட்ஸ் றோட் வீதியில் ஸ்ரீ மேருபுரம் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஆன்மாக்களின் தியானாதிகளுக்கு தாம் அகப்படுதல் வேண்டும் என்ற பெருங்கருணை கொண்டு இரத்தின கல்பித மந்திர சிம்மாசனத்தில் கொலு வீற்றிருந்து தன்னை நாடி ஓடி வரும் பக்தர்களுக்கு மல மாயாதி-களை நீக்கி பேரருள் பாலிப்பதற்காக ஸ்ரீ விநாயகப் பொருமான்,

ஸ்ரீ சிவன், ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ சுப்பிரமணியர், பக்த ஆஞ்சநேயர், ஆகிய பரிவார மூர்த்திகளோடும், ஸ்ரீ மஹாமேருவோடு கூடிய மஹா பத்திரகாளி அம்பாள் திருவருள் கொண்டுள்ளார்.

நான் எனது உபாசனை தெய்வமாகிய காளிகாம்பாளை கடந்த பதினைந்து வருடங்களாக ஆன்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் வழிபாடு செய்து வருகின்றேன். இதனால் சில அடியார்களுக்கு தெரிய வரவே அவர்களின் ஊக்கத்தினாலும், காளிகாம்பாளின் திருவரளினாலும், என் முயற்சியினாலும் இவ்விடம் கிடைக்கப்பெற்றேன்.

வழிபாடுகளில் மிகவும் சுலபமானதும், எளிதானதுமான வழிபாடு அம்பிகை வழிபாடாகும். பிள்ளைகளின் உணர்வைத் தாய்போல் புரிந்து அவர்களுக்கு எது தேவையோ அவைகளையெல்லாம் நிறைவேற்றக்கூடிய தாய் லோக மாதாவாக விளங்குகின்ற ஆதிபராசக்தியாக விளங்கும் ஸ்ரீ மேருபுரம் மஹா பத்திரகாளி அம்பாள் அருள் மேன்மேலும் பெருக இலண்டன் சைவப் பெருமக்கள் எல்லோரும் ஒருமித்து வழிபாடுசெய்ய அருள் கடாட்சம் பெருகும். உருவேற திருவேறும். நம்நாட்டு மக்கள் இடர்கள், துன்பங்கள் நீங்கி சுபீட்சமாக வாழ ஸ்ரீ மேருபுரம் பத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தங்களை திரிகரண சுத்தியுடன் வணங்கி அம்பாளின் அருள் ஆசீர்வாதம் பெற வேண்டுகின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

ஆலய ஸ்தாபகர் தர்மகர்த்தா
காளிதாஸன்- சிவஸ்ரீ லிங்க லோகநாதக்குருக்கள்
அம்பிகை அடியார்கள்

ஆலயம் திருக்கதவு திறந்திருக்கும் நேரம்
**காலை- 9.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை**
காலைப் பூசை- 9.00 மணிக்கு மதியப் பூசை - 12.00 மணிக்கு
**மாலை- 5.30 மணி முதல் இரவு- 9.00 மணிவரை**
இரவுப் பூசை- 7.30

வெள்ளி, செவ்வாய், விசேட தினங்களில் மதியம் 2.00 மணி வரையும், இரவு 9.30 மணி வரையும் திருக்கதவு திறந்திருக்கும்.

மேற்குறிப்பிட்ட தினங்களில் மாலை 6.00 மணிக்கு அபிஷேகமும் இரவு 8.00 மணிக்கு பூசையும் நடைபெறும்.

# சைவத்தின் பெருமையும் இன்றைய நிலைமையும்

சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய சர்மா — மொறிசியஸ்

திருச்சிற்றம்பலம்

பவழமால்வரையில் நிலவெறிப்பதுபோல் பரந்தநீற்றழகு பச்சுடம்பிற்
திவள மாதுடனின்றாடிய பரமன் சிறுவனைப் பாரதப்பெரும்போர்
தவளமா மருப்பொன்றொடித்துயர் கிரிப்புறத்தெழுதும்
கவளமா களிற்றின்றிருமுகம்படைத்த கடவுளை நினைந்துகை தொழுவாம்.

திருச்சிற்றம்பலம்

சைவம் குன்றிய காலத்து சைவத்தை கட்டியெழுப்ப யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் போட்ட அத்திவாரமே சைவ வினாவிடை என்னும் அரிச்சுவடியாகும். இந்நூலைத் தொடர்ந்து ஆறுமுகநாவலர் அவர்கள் இலகுவான முறையில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பல நூல்களை வெளியிட்டுச் சைவத்தைக் காப்பாற்றினார்.

எமது சமய நூல்களும் சிவபெருமானாலும் அவரால் உணர்த்தப் பெறவுணர்ந்த தேவகணங்கள், முனிவர்கள், நாயன்மாராலும் அருளப் பட்டவை. ஏனைய சமய நூல்களுக்கும் எமது சமய நூல்களே ஆதார நூல்களாகும். நாம் எமது மொழியையும் எமது சமய நூல்களையும் கற்றுக்கொள்ள போதிய முயற்சி செய்யாமையே காரணமாகும். அவ்வப் போது மக்களுக்கு இலகுவாக புரியவேண்டும் என்பதற்காக வேத சிவாகமங்கள் புராணங்களாகி திரு முறைகளாகி இலகுவாகின. ஆயினும் இக்கால நவீன யுகத்துக்கேற்ப நாம் எமது சமயக்கருத்துக்களை இன்னும் இலகுவாக ஆக்கி எம்மக்களிடம் இலகுவாகச் சென்றடையச் செய்ய வேண்டும். எம்மவர்கள் இக்காலத்தில் சமய நூல்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. புராணங்கள் திருமுறைகள் மிகக் கடினமானவை என்கிறார்கள். தங்கட்கு புரியவில்லை என்கிறார்கள். ஆனால் வேதசிவாகம திருமுறைகளின் சாரத்தையே திருவள்ளுவர் மிக இலகுவாக குறட்பாவாக பாடியுள்ளார். உதார ணத்துக்கு ஒரு குறள்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

இதைவிட இலகுவாக இக்காலத்தில் நாம் இவர்கட்கு எமது சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டும். புராணங்களைப் படித்தாலே போதும் எமது சமயக் கருத்துக்களை மட்டுமல்லாது எமது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அறிந்து கொள்ளலாம்.

எமது சமய நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறும் பெரிய புராணத்தைப் படித்தால் எமது சமயத் தலைவரான சிவபெருமானின் சிறப்பும் அருளும் தன்மையும் அவரின் அருளைப் பெற ஆன்மாக்களாகிற நாம் எப்படி ஒழுக வேண்டும் என்பதும் நன்கு அறியப்படும்.

கந்தபுராணத்தைப் படித்துப் பார்த்தால் அதிலே உள்ள இலக்கியச் சுவையும் கற்பனை நலனும் வர்ணனை மேன்மையும் கூடவே கந்தவேளின் கருணையும் புரியும்.

திருவாதவூரடிகள் புராணத்தைப் படித்துப்பார்த்தால் அதிலே குருவழிபாடு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மிக இலகுவாக புரியும். புத்தரை வாதில் வென்ற சருக்கம் எமது சைவசித்தாந்தப் பெட்டகம் எனலாம்.

இப்பொழுது இப்புராணங்களைப் படிப்போர் இல்லை என்றே கூறலாம். ஆனால் ஈழத்திலே சில தசாப்தங்கட்கு முன்பு வரை தொலைக்காட்சி, சிறிய வானொலிப்பெட்டி அதிகம் பரவியிராத காலம் யாழ்ப்பாணம் சுருட்டு பிரசித்தி பெற்றிருந்தது. அந்த சுருட்டு

சுற்றும் தொழில் குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்ற காலம். அக்காலத்தில் சுருட்டுச் சுற்றும் கொட்டில்களில் பெரியவர்கள் கைகளினால் சுருட்டுச் சுற்றுவார்கள். சிறுவர்கள் அவர்கட்கு கையுதவி புரிவார்கள். அங்கே அந்த சுருட்டுத் தொழிலை நடாத்தும் முதலாளி அச்சுருட்டுக் கொட்டிலில் நடுவில் மேடையிட்டு தமிழ்ப் பண்டிதர் புலவர்களை அழைத்து அவர்கட்கு உணவு உடை கொடுத்து தினமும் கந்தபுராணம், பெரியபுராணம் திருவாதவூரடிகள் புராணம் என புராணபாடல்களைப் பாடி பொருள் கூறுவித்துச் சமயம் வளர்த்தனர்.

அவ்வாறே பல கோவில்களில் இன்றும் கந்தபுராணம் படிக்கப்பட்டு வருகின்றது. மார்கழி மாத திருவெம்பாவை விழா நாட்களில் இன்றும் பல கோவில்களில் திருவாதவூரடிகள் புராணபடனம் நடைபெற்று வருகின்றது. இம்முறை யாழ்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்களாலே ஆரம்பிக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கொக்குவில் குமாரசாமிப் புலவர், சாவகச்சேரி சங்கரப்பிள்ளை, அராலி சங்கர பண்டிதர் ஆகியோரால் தொடர்ந்து வளர்க்கப்பட்ட மாணவ பரம்பரை யினரால் நடைபெற்று வருகின்றது. ஆனால் தமிழகத்தில் இம்முறை இருப்பதாகத் தெரியவில்லை.

எமது சமய நூல்களிலே மூன்று நூல்கள் சிறப்புப் பெற்றவையாகக் கூறப்படு கின்றன.

1) தெய்வம் மனிதனுக்குக் கூறியது.
2) மனிதன் தெய்வத்துக்குக் கூறியது.
3) மனிதன் மனிதனுக்குக் கூறியது.

தெய்வம் மனிதனுக்குக் கூறியது வியப்பல்ல. தனது கடமையைச் செய்ய வேண்டிய பாசத்தால் பீடிக்கப்பட்டவனுக்காக உபேதசிக்கப்பட்டது. இது எந்த நூல் என்று உங்களுக்குப் புரிந்திருக்கும். இது பகவத்கீதையாகும். பாரதப் போரின் நடுவே கண்ணபிரானால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப் பட்டது.

மனிதன் மனிதனுக்குக் கூறியது. இது திருக்குறள் என்பது நீங்கள் அறிந்ததே. மிக இலகுவாக சிறிய குறட் பாக்களாக வேத சிவாகமப் பொருட்களை இனிய தமிழில் வள்ளுவப் பெருந்தகை எமக்குத் தந்தது திருக்குறளாகும்.

மனிதன் தெய்வத்துக்குக் கூறியது. இது நடக்கக்கூடிய காரியமா? அவன் அருள் இன்றி அது நடந்திருக்குமா? இது எப்படி நடந்தது? ஏன் நடந்தது? எமது சமயத்திருமுறைகளிலே தனிச்சிறப்புவாய்ந்தது திருவாசகம். இதனைப் பாடியவர் மாணிக்கவாசக சுவாமிகள். மாணிக்கவாசகருக்காக சிவபெருமான் நான்கு தடவை மானுட வடிவெடுத்து திருவருள் புரிந்துள்ளார். வேறு எந்த நாயனாருக்காகவோ வேறு எதற்காகவோ இவ்வாறு பல தடவை மானுட வடிவெடுத்ததாகத் தெரிய வில்லை. ஏனைய நாயன்மார் போலல்லாது தனது பற்றற வேண்டியே மாணிக்கவாசகர் முழுமையாக திருவாசகத்தில் சிவபெருமானைப் போற்றுகின்றார். இதனாலேயோ என்னவோ இன்று வாழ்க்கையின் இறுதி நிலையில் ஒருவர் உள்ள போதும் இறுதிச் சடங்கின் போதும் திருவாசகப் பாடல் பாடும் வழக்கம் ஏற்பட்டது போலும்.

திருக்கோவில் வழிபாட்டிலே பஞ்சபுராணம் பாடும் வழக்கம் அருகிவருகின்றது. இங்கு கோவில் வழிபாட்டிலே எல்லோரும் சேர்ந்து தேவாரம் திருப்புகழ் பாடுகிறார்கள்.


திருக்கோவில்களில் வழிபாடு விழாக்கள் போன்றவற்றை எவ்வாறு செய்ய வேண்டுமென ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இப்போது அவை மாறிவருகின்றன. முதலாவது சிவாசாரியர்கட்கு போதிய ஆகமப்பயிற்சியின்மை, இரண்டாவது பொருள் வசதியின்மை, மூன்றாவது ஆலய பரிபாலகர்களின் உத்தரவுகள். இதனால் திருக்கோவில்கள் இறைவனின் உறைவிடமாக இல்லாது வியாபாரத் தலங்களாக மாறி வருகின்றன. இந்நிலை மாற வேண்டும். எமது சைவத்தையும் தமிழையும் பிரிக்க முடியாது என்கிறார்கள். ஆலய வழிபாட்டு மந்திரங்கள்

வேத சிவாகமங்கள் வடமொழியிலேயே (சமஸ்கிருதத்தில்) உள்ளன. அதனை அந்தணர்கள் கற்றுச் சிவாசாரியர்களாகி திருக்கோவில்களில் கடமை புரிகின்றனர். அந்த வேத சிவாகமங்களை நன்கு கற்கக் கூடிய வசதிகளும் தற்போது குறைந்து வருகின்றன. பல காரணங்களால் அந்தணர்கள் தம் குலத்தொழிலைச் செய்ய முன்வரத் தயங்குகின்றனர். எமது சமய நாயன்மார்களில் முதன்மை யானவர்கள் அந்தணர்களே. அவர்களே வேதசிவாகமப் பொருளை தமிழ் மொழியிலே திருமுறைகளாகத் தந்தனர்.

இந்த நூற்றாண்டில் மக்கள் ஒன்பது கோள்களின் இயக்கப்பாட்டிலிருந்து மாறி செயற்கைக் கோள்களின் கட்டுப்பாட்டில் இயங்குபவர்களாக மாறியுள்ளனர். எனவே எமது சமயச் சடங்குகள், திருக்கோவில் வழிபாடுகள் ஆகியவற்றில் நேரக் குறைப்பும் ,அதே வேளை சமய முரண்பாடற்ற முறைமையையும் கடைப்பிடிக்க ஆவன செய்ய வேண்டும். தேவையற்றனவற்றையும் அவசியமற்றவையையும் நீக்க வேண்டும்.

இக்காலத்தில் எமது சமய நூல்களை மட்டுமல்லாது ஏனைய நூல்களையோ தினசரிப் பத்திரிகைகளையோ முழுமையாகப் படிப்பவர்கள் இல்லை யெனலாம். மேலோட்டமாகவே படிப்பவர்களே பலர். எனவே எமது சமயக் கோட்பாடுகள் சமயக் கருத்துக்கள் திருமுறைக் கருத்துக்கள் முதலானவற்றை சுருக்கமாக இலகுவான முறையில் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வண்ணம் நவீன முறையில் கணனி இணையம் மூலமாக செயற்படுத்த வேண்டும். அதற்கான முயற்சியில் அனைவரும் ஒருமித்த கருத்துடன் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

**“மேன்மை கொள் சைவநீதி விளங்குக இணையமூலம்”**

# கலாயோகி ஆனந்த குமாரசாமி

## சி குமாரசாமி – மானிப்பாய்–சிங்கப்பூர்



ஸ்ரீ நடராஜரின் திருநடனத் தத்துவத்தை உலகறியச் செய்த செம்மல் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் (1877–1947)

நாம் ஆலயங்களில் நடராஜரின் விக்கிரகத்தைத் தரிசிக்கிறோம். அந்த அழகுச் சிலை முன்னால் மெய்மறந்தும் நிற்கிறோம், ஆனால் அந்த நடனம் எதைக் குறிக்கிறது என்று சிந்திக்கிறோமா?

அப்பர் அடிகள் தமது தேவாரத்தில் சிதம்பரம் நடராஜரின் தோற்றத்தைப் பாடியுள்ளார்.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே**

உண்மை விளக்கம் எனும் நூலில் மனவாசகங்கடந்தார் நடராஜரின் பஞ்சகிருத்திய நடனத்தை ஒரு செய்யுளால் விளக்குகிறார்.

**தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதமுத்தி**
**நான்ற மலர்ப் பதத்தே நாடு**

இதன் பொருளை அறிவோமா?

உடுக்கு ஏந்திய திருக்கரத்தால் படைத்தல் தொழிலையும் அபய கரத்தினால் காத்தல் தொழிலையும்,

தீயை ஏந்திய திருக்கரத்தால் அழித்தலையும், முயலகன் மீது ஏற்றிய திருவடியால் மறைத்தலையும்,

தூக்கிய திருவடியால் அருளலையும் என அறிந்து கொள்க.

இந்துக்களாகிய எமக்கு நடராஜரின் ஆனந்த நடனம் ஓரளவு புரிந்தாலும் மேனாட்டினருக்கு இது புரியாத புதிராகவே காணப்படுகிறது. சுவாமி விவேகானந்தரின் சிகாக்கோ (Chicago) பிரசங்கத்தின் பின்னரே அவர்களுக்கு இந்துசமயம் பற்றி ஓரளவு அறிவு ஏற்பட்டது எனலாம்.

அது வரை காலமும் மூடநம்பிக்கைகளும் பல தெய்வ வணக்கங்களும் கொண்டதே இந்துசமயம் என்றிருந்தவர்களுக்கு ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் Dance of Siva என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகள் வியப்பைத் தந்தன.

இத்தகைய பெருமைகளுக்குப் பாத்திரமாக விளங்கிய ஆனந்தர் இந்தியாவைச் சேர்ந்தவராகவே மேனாட்டினர் கருதினர். ஆனால் அவர் மானிப்பாயைச் சேர்ந்த இலங்கைத் தமிழரான சேர் முத்துக்குமாரசுவாமிக்கும் ஆங்கிலேயப் பெண்மணியான எலிசபெத் பீபி Elizabeth Beeby என்பவருக்கும் ஒரே மகனாக கொழும்பில் 22–8–1877 பிறந்தார். ஆனந்தர் ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோது தாயாரின் உடல் நலக்குறைவால், குழந்தையுடன் இங்கிலாந்து செல்ல நேர்ந்தது. தந்தையார் சட்டசபை வேலை காரணமாக உடன் செல்லவில்லை. ஆனால் அவர் சில மாதங்களின் பின்னர் புறப்படவிருந்தார். ஆனால் விதி

சதி செய்தது போல அவர் கப்பல் ஏறுவதற்குரிய தினத்தன்று சடுதியாக மரணமடைந்தார். இதனால் இலங்கை மக்கள் மிக்க கவலை அடைந்தனர். அவரே தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக சட்டசபையில் கடமையாற்றினார்.

ஆனந்தருக்கு அப்போது இரண்டு வயதுப்பிராயம். தாயாருடனும் பேத்தியாருடனும் இங்கிலாந்திலுள்ள கென்ற் (Kent) மாகாணத்தில் வளர்ந்து வந்தார். ஆரம்பப் படிப்பின் பின்னர் இலண்டன் பல்கலைக்கழகம் சேர்ந்து படித்து விஞ்ஞானக் கலைமாணியானார். (B.Sc (Hons.) பட்டம் பெற்ற பின் தமது தந்தையாரின் நாட்டுக்கு 1900ம் ஆண்டளவில் சென்ற போது அரசினர் அவரை கனிப்பொருள்துறை ஆராய்ச்சியாளராக நியமித்தனர். அத்துறையில் ஈடுபட்டிருக்கும் போது தோறியம் (Thorianite) என்ற மூலகத்தைக் கண்டு பிடித்தார். இச்சாதனைக்காக இலண்டன் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் (Doctor Of Science) வழங்கியது. 1905ம் ஆண்டு பெற்ற பட்டத்தின் பின்னர் இலங்கையிலுள்ள புராதன வெண்கலச்சிலைகளையும் விக்கிரகங்களையும் சேகரிக்கத் தொடங்கினார். விஞ்ஞானத்திலிருந்து படிப்படியாக கலைப் பொருள்களில் ஆனந்தரின் நாட்டம் சென்றது. இதுவே அவருக்கு உலகப் புகழை ஈட்டியது.

இலங்கையை விட்டு இந்தியா சென்ற ஆனந்தர் புராதன சிற்பங்களையும் விக்கிரகங்களையும் சேகரித்து 1910ம் ஆண்டு அலகபாத் (Allahabad) நகரில் மாபெரும் கண்காட்சி ஒன்று அமைத்தார். இந்தியர்கள் மட்டுமல்லாமல் மேனாட்டினரும் அக் கண்காட்சியைப் பார்த்தனர். வெகுவாகப் பாராட்டினர். இதனால் மிகுந்த உற்சாகமடைந்த ஆனந்தர் மேனாட்டினருக்கு இந்தியக் கலைகளின் சிறப்பினை உணர்த்த முற்பட்டார்.

முதலாவது உலக மகாயுத்தம் 1914 ஆண்டில் தொடங்கியதையடுத்து ஆனந்தர் அமெரிக்காவுக்குப் பயணமானார். தமது அரிய கலைப் பொக்கிஷங்களுடன் சென்றவரை (Boston) நகரிலுள்ள நூதனசாலையில் (Museum) இந்தியப் பிரிவின் தலைவராக்கினர். அமெரிக்காவிலிருந்து வெளியிட்ட கட்டுரைகளே, சிவ நடனம் (Dance Of Siva) பற்றியவை. பதினான்கு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்று ஆனந்தரால் வெளியிடப்பட்டது. இக் கட்டுரைகள் மேனாட்டினரின் கவனத்தை ஈர்த்தன. பிரான்சு நாட்டு அறிஞரான ரொமெயின் ரோலண்ட் (ROMAIN ROLLAND) என்பவர் சிவநடனத்தைப் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். ஆனந்தரின் நூலுக்கு அணிந்துரையும் எழுதி வழங்கினார். இருவரும் நண்பர்களாகினர்.

ஆனந்தர் இந்தியாவில் இருக்கும் போது கவிஞர் இரவீந்திரநாத் தாகூரைச் சந்தித்த வேளை தான் வங்காளி (Bengali) மொழியில் எழுதிய கீதாஞ்சலி என்ற கவிதைகளைக் காட்டினார். ஆனந்தர் அத் தொகுப்பிலுள்ள சில கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உற்சாகமூட்டினார். பின் தாகூர் ஆங்கிலப் புலவரான YEATS என்பவரை கப்பற் பிரயாணமொன்றில் சந்தித்த போது ஆனந்தரின் மொழி பெயர்ப்பினைக் காட்டினார். கவிதைகளை நன்றாக இரசித்துப் பாராட்டிய தாகூருக்கு நொபெல் (NOBEL) பரிசு கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்தார். இதனால் இரவீந்திரநாத் தாகூருக்கு நொபெல் பரிசு கிடைத்தது. மகாத்மா காந்தியை தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் சிறைப்படுத்திய போது கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. ஆனந்தரும் அக் கூட்டங்களில் கலந்து கண்டனக் குரல் எழுப்பியதோடு அமையாது இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மகாத்மா காந்தி சுதேசியப் பொருள்களையே பாவிக்க வேண்டும் என்றும் அந்நியப் பொருள்களை தடை செய்ய வேண்டும் என்றும் பிரசாரம் செய்த போது ஆனந்தரும் ஆதரவு நல்கினார்.

மேலும் சைவ சித்தாந்தம் மிக உன்னதமானது என்று கலாநிதி போப் (G.V.POPE) கூறியதை ஆதாரமாகக் கொண்டு சைவ சித்தாந்தத்தினை ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதினார். சைவ சமய குரவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளுடன் நாயன்மாருடைய வெண்கலச் சிலைப்படங்களும்

வெளியிடப்பட்டன.

சிவபெருமானின் திருநடனங்கள் 108 வகைப்படும் என நாட்டிய நூல்களில் காண்கிறோம். ஆனால் அவைகளின் அடிப்படைத் தத்துவம் ஒன்றே. வடஇந்தியக் கலைஞர்களான உதய் சங்கர்–அமலா தம்பதியினர் Dance Of Shiva என்ற நாட்டிய நாடகத்தை திரைப்படமாக்கி மேனாட்டிலும் இந்தியாவிலும் காண்பித்தனர். ஆனந்தரின் கட்டுரைகளுக்கும் விளக்கம் போல இது அமைந்தது.

கலாயோகி அவர்கள் தமது தந்தையாரின் நாடான இலங்கைக்குப் பல தடவைகள் சென்றுள்ளார். இலங்கையில் தந்தையார் போல் தலைப்பாகையுடன் தோற்றமளித்தார். ஆனால் பிற்காலத்தில் வடஇந்தியாவுடன் அதிக தொடர்புகள் கொண்டிருந்தமையினால் போலும் அவரை இந்தியராக மேனாட்டினர் கருதினர்.

கலாயோகி, ஈதெல் (ETHEL) என்னும் அமெரிக்கப் பெண்ணை மணந்து தம்பதிக்கு இராமநாதன் எனும் ஒரு மகனுள்ளார். அவர் நியூயோர்க் (New York) இல் பிரபல அறுவைச் சிகிச்சை நிபுணராகத் திகழ்கிறார்.

இத்தகைய உலகப் புகழை ஈட்டிய கலாயோகி அவர்கள் தமது 70வது வயதில் பொஸ்ரன்(Boston) நகரில் 9-9-1947 காலமானார். மகாத்மா காந்தி, இந்தியக் குடியரசின் தலைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இராஜாஜி, சி.பி.இராமசாமி ஐயர் போன்றோரின் அமோகமான பாராட்டுகளைப் பெற்ற கலாயோகி அவர்கள் புகழுடம்பு பெற்றபோதும் உலகத்தலைவர்களின் அஞ்சலிகளைப் பெற்றார்.

இலங்கை அரசு கலாயோகி அவர்களுக்கு தபால் முத்திரையை மானிப்பாயில் வெளியிட்டது. மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தமது விடுதி ஒன்றுக்கு ஆனந்தகுமாரசுவாமி விடுதி எனப் பெயரிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய புருஷர்களை நாம் மறக்கலாமா?


**கலசம் இந்தப் புலம் பெயர் நாட்டில் வாழும் சைவமக்களுக்குச் செய்து வரும் அளப்பரிய சேவைகளுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!**

**டாக்டர் வீ. பழனிவேல்** F.D.S.R.C.S(Eng)

(பல்வைத்தியர்)

127 Green Gate Street, London E 13 OBG

**Tel: 0208 472 9429**


கண்மணி ஜுவலரி
KANMANY JEWELLERY
“சவுத்ஹோல்” நகரில் முதன்முதல் தமிழர் நகைமாளிகை
“கண்மணி ஜுவலரி”
வாழ்க்கையின் மிகவும் இனிமையான நிகழ்வுகளையும்
சந்தர்ப்பங்களையும் ஜொலிக்கும் தங்க மாளிகை
“கண்மணி ஜுவலரி”
இன்றைய விஜயம் உங்கள் நம்பிக்கையின் நாணயமாகும்.
நாளைய விஜயம் உங்கள் சக்தியின் சேமிப்பாகும்.
இன்று முதல் நம்மவர் நகை மாளிகையாய்
“கண்மணி ஜுவலரி”
225A THE BROADWAY SOUTHALL MIDDLESEX UB1 1ND
TEL: 020 8571 3443 FAX: 020 8574 5495
Mobile:
07956 445 210
உரிமையாளர்—
திரு/திருமதி. ஸ்ரீ முருகன்.

# K.R.K. FOOD & WINE

## Wholesales & Retails

திறந்திருக்கும் நேரம்
காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை



உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பழவகைகள்,
சகலவிதமான உடன் மரக்கறிவகைகள், கடலுணவுப் பொருட்கள்,
மற்றும் அனைத்து மளிகைப் பொருட்களுக்கும்...
உங்கள் நுகர்வுத் தேவைகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் தெரிவு செய்து கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்கவேண்டிய இடம்

## K.R.K Food & Wine

தரத்திற்கும் சுவைக்கும் என்றுமே முதன்மை பெறுவது

**K.R.K Food & Wine**

120, Horns Road, Newbury Park, Essex IG2 6BL.

Tel: 020 8518 9092

உங்கள் வதிவிடம் அருகே ஒரு புதிய தமிழர் அங்காடி.
சகல விதமான சர்வதேச தொலைபேசி அட்டைகள், ஓடியோ, வீடியோ சீடிக்கள்
என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

# Meera Gold Smith



செய்கூலி மட்டும் கொடுத்து பழைய தங்கத்தில் புத்தம்புது நகைகளை செய்து கொள்ளவும், உயர்தர அதிஸ்டநவரத்தினக் கற்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும் ரூட்டிங்கில் நீங்கள் நாடவேண்டிய இடம்.

பிரமாண்டமான காட்சி அறைகள் இல்லை பிரமிக்க வைக்கும் கலைவண்ணம் வடிக்கும் நகைச் சிற்பிகளின் கலைக்கூடம். தங்கம் வாங்கும் போது தங்கம் தெரிந்தவர்களிடம் வாங்குங்கள்.

**896, Garrat Lane, Tooting, London SW17 0NB.**
**Tel: 020 8767 2616, Mobile: 0795 894 8685**

# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

## M. MARKANDAN. LL.B

All aspects of immigration matters from appeals to European court of Human Rights
All types of Conveyancing
Litigation
All courts Civil/ Criminal
Landlords/ Tenant matters
Matrimonial
Police Station advice
All D.S.S and housing benifit matters
**LEGAL AID**

720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON
E12 6BT

TEL
020 8514 8188
FAX
020 8514 8303




BHAVATH GEETHA

**life is to be enjoyed fully !!**
**"you live by choice, not by chance"!**

**Do you know wat you want in life?**
**If you were to meet God, do you know what you would request from him / her?**
**Do you know the difference between love & attachment in life?**
**Does your success or failure in life mentally afect you?**
**Do you get stressed out due to the Weather?**
**Do you get angry and agitated?**

And many more question are discussed every week based on Bagavath Geetha Vedanta Philosopy...

**By: Shri R Bhaskar**
**(Graduate of Vedanta Academy in India)**

Free Admission
(Strictly by booking only due to Limmited space availability)

**Venue: SMS, 2 Salisbury Road, Manor Park, London E12 6AB**

**From 7.00pm to 8.30pm - Sunday**
Tel: 020 8586 0587 e-mail:veera_rgo@yahoo.com

**CHARTER SECURITY**
Job Opportunities

Controller assist Manager in smoth runing of operations within the Control Room.

Hourly Rate £7.00 (inclusive bonus) 4 Weeks annual leave

mobile drivers / security guards Required for our head office


Please cll Mandy Howarth / clare Withehead direct on **020 8507 7717** for detaails / interiews.

**1st Floor Camridgage Home-camridge Road, Banking Essex, 1G11 8NR**
**Tel : 020 8507 7717**
**Fax : 020 8507 7702**

# அருணகிரிநாதரின் கந்தர் அநுபூதி

## பகுதி-2 (தொடர்ச்சி)

### பாடும் பணி



**ஓம்** என்ற பிரணவம் மூன்று ஒலிகள் கூடிய எழுத்து. அகார, உகார, மகாரங்கள் மூன்றும் இணைந்து ஓங்கார ஒலி எழும், அருணகிரியார் ஓங்காரத்தின் உறுப்புக்களாகிய அந்த மூன்றையும் தனித்தனியே எடுத்து ஆண்டார். மூன்று வகையில் ஆண்டார். அகரத்தின் விகாரமே ஆகாரம். அகரம் குறில். அந்த ஓசை பின்னும் ஒரு மாத்திரை நீண்டால் "ஆ" என்ற நெடிலாகும். ஆகாரம் இரண்டு அகரத்துக்குச் சமானமானது. அகரத்தைப் பின்னும் ஓர் அகரம் கூட்டி "ஆ" என்று முதலில் அமைத்தார். அடுத்த ஒலி "உகரம்". அதை ஒரு மெய்யுடன் சேர்த்தார். "ட்" என்ற மெய்யை வைத்து அந்தப் பீடத்தின் மேல் உகரத்தை ஏற்றினார். "டு" ஆயிற்று. மூன்றாம் எழுத்து "ம்" அதை அப்படியே வைத்தார். அகரத்தின் விகாரமாகிய "ஆ" வும் உகரம் சார்ந்த உயிர்மெய்யாகிய "டு"வும் இயல்பாகவே உள்ள "ம்" என்ற எழுத்தும் சேர்த்து "ஆடும்" என்ற சொல்லாயின. அந்தச் சொல்லினூடே அகர உகர மகரங்கள் கரந்து நின்று ஓங்கார ஒலியை எழுப்பியது போலச் செய்கின்றன.

ஆடும் மயில் என்று பாடினால் சந்தியில் ஆடுமயில் என்று வந்து மகரம் கெட்டுப் போகும். ஆடும் தோகை, ஆடும் குதிரை, என்று வேறு வகையா-கச் சொன்னால் மகரம் திரிந்துவிடும். மகரம் திரியாமல் இயல்பு ஒலியோடு நிற்க வேண்டும் என்று எண்ணிய அருணகிரியார் ஆடும்பரி என்று தொடங்கினார். பகரத்துக்கு முன் நிற்கும் மகரம் கெடாமலும் திரியாமலும் உள்ளபடியே இருக்கும் அல்லவா? ஆகவே ஆடும் என்ற சொல் அகார உகார மகாரங்களைத் தன்னகத்தே அடக்கி ஓங்காரத்தை முன்வைத்துத் தொடங்கியதாகச் செய்து. இது சொல்லின் அமைதி.

இத்துணை நுட்பமாக ஆராய்வதைவிட்டு " ஆடுகின்ற மயில்" என்ற பொருளை எண்ணினாலும் ஓங்காரத்தின் நினைவு உண்டாகும். ஆடாத மயில் ஓங்காரத்தை நினைப்பூட்டுவதில்லை. ஒரு காலைத் தூக்கித் தோகையை விரித்து ஆடும் மயிலின் தோற்றத்தைப் பார்த்தால் தமிழில் உள்ள "ஓ" என்ற எழுத்தின் வடிவம் தோற்றும். மயிலே பிரணவத்தின் அம்சம் என்பது அருணகிரிநாதர் கொள்கை.

**"ஆன தனிமந்த்ர ரூபநிலைகொண்ட**
**தாடுமயில் என்ப தறியேனே"**

என்று திருப்புகழில் இக்கருத்தைப் புலப்புடுத்தியிருக்கிறார்.

ஆதலால், ஆடும் பரி என்னும் தொடர் பிரணவ-சொரூபத்தை நினைப்பூட்டும் பொருளை உடையதாக நிற்கிறது. எழுத்து வகையாலும் சொற்பொருளாலும் பிரணவத்தை முதலில் கொண்டது கந்தர் அநுபூதி என்பது என்பது இப்போது தெளிவாகிறதல்லவா? **எல்லா ஒலிகளுக்கும் மூல ஒலி பிரணவம் என்பார்கள்.** அதுவே முடிவுமாகும். அதனை முன் வைத்துத் தொடங்கும் கந்தரநுபூதி எழுதும் மறையைப் போன்ற சிறப்புடையது. ஞானசம்பந்தர் காட்டிய வழியைப் பின்பற்றியது. " ஆடும்பரி, "ஆடும்பரி" என்று சொல்லிச் சொல்லி ஆனந்தமாக ஆடும்படிசெய்கிறது.

**வேலின் தனிச் சிறப்பு**

ஆடும் பரியையும் வேலையும் அணிசேவலையும் பாடும் பணியே விரும்பினார் அருணகிரிநாதர். மயிலையும் வேலையும் சேவலையும் அணைத்துப் பாடுவது ஒரு மரபு. தனித் தனியே அவற்றைச் சிறப்பித்துப் பாடுவதும் முருகன் அடியார்க்கு வழக்கம் அருணகிரிநாதர் மயிலைத் தனிப் பாட்டுக்களால் கந்தர் அலங்காரத்தில்

பாராட்டியிருக்கிறார். வேலையும் சேவலையும் பாடியிருக்கிறார். மயில் வகுப்பு, வேல் வகுப்பு, என்றும் சேவல் விருத்தம் மயில் விருத்தம் என்றும் நூல்களை அருளியிருக்கிறார்.

ஆடும் பரியென்று மயிலுக்கு ஆம் செயலை அடையாக்கிச் சிறப்பித்தார். மயில் ஆடும்பொழுது அழகும் அருளும் இலங்கும். அணிசேவல் என்றுசேவலைப் பாராட்டினார். அணிசெய்யும் சேவல், அழகுதரும் சேவல் என்று பொருள் கொள்ளவேண்டும். வீரம் உடையவருக்கு அலங்காரங்கள் பல இருந்தாலும் அவர்களுடைய வெற்றியைக்காட்டும் அணியே மிகச் சிறந்தது. அந்த வெற்றிச் சிறப்பைப் பலருக்கும் எடுத்துக் காட்டும் வகையில் ஓங்கி நிற்பது கொடி. அதை வெற்றிக்கொடி என்று சொல்லும் வழக்கம் உண்டல்லவா? வெற்றி மிடுக்குடையார் எங்கே சென்றாலும் தம் கொடியை உயர்த்திக் கொண்டு செல்வர். அதனால் அணி சேவல் என்றார்.

மயிலையும் சேவலையும் அடைமொழிகளால் சிறப்பித்த அருணகிரியார், வேலுக்கு எத்தகைய அடையும் கொடுக்காமல் சொன்னார். அப்படிச் சொல்லுவது முறையா என ஐயம் தோன்றலாம்.

சிறப்புடைய பொருளுக்குப் பல பல அடையாளங்கள் சொல்லவேண்டியதில்லை. அடை இன்றி வழங்குவதனாலே அப்பொருளின் சிறப்பு புலப்படும். திருக்கோவையாரின் முதற்பாட்டில் பல மலர்கள் வருகின்றன. அங்கே கோங்கு என்று அடைமொழி யின்றிச் சொன்னார் மாணிக்கவாசகர். அங்கே உரைகாரர் கூறுவதை இங்கே தெரிந்து கொள்வது நலம். " மகளிர்க்கு உறுப்பில் சிறந்த உறுப்பாகிய முலைக்கு உவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடைகொடுக்கக் கடவதன்றோ எனின், அடை கொடுப்பின் பிற உறுப்புகளுடன் இதனையும் ஒப்பித்ததாம். ஆகலான் இதற்கு அடை கொடாமையே முலைக்கு ஏற்றத்தை விளக்கி நின்றது. அது முற்கூறிய வகையில் திருக்கோயில், திருவாயில், திருவலகு, என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனார் என்னாதது போலக் கொள்க. "

மயில், வேல், சேவல் என்ற மூன்றிலும் சிறந்தது வேல். அதன் சிறப்புத் தோன்ற அடை இல்லாமல் நடுநாயகமாக வைத்தார். அதற்குள் சிறப்புப் பல. முருகப் பெருமனை வணங்குபவர்கள் வேலில் அவனை ஆவாகனம் பண்ணி வழிபடுவார்கள். வேலைமாத்திரம் வைத்து அதையே முருகனாக வழிபடும் திருக்கோயில்களும் உண்டு. பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் அத்தகைய கோயில் ஒன்று இருந்தது. அதை இளங்கோவடிகள் " வேற்கோட்டம்" என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். **யாழ்ப்பாணத்தில் செல்வச்சந்நிதி என்ற திருக்கோயிலும் நல்லூர் முதலிய இடங்களிலும் வேலையே முருகனாகக் கொண்டு வழிபடுகிறார்கள்.** முருகனுக்கு ஆறுமுகம் இருப்பது போல வேலுக்கும் ஆறுபட்டைகள் உண்டு. முருகப்பெருமான் திருவுருவத்தையும், அவன்பால் சார்த்தியிருக்கும் வேலையும் தரிசிக்கும் போது கவனித்தால் அது அவன் அடியையும் கரத்தையும் தொட்டுக்கொண்டு முடியளவும் செல்வதைக் காணலாம். வேலை அடி முதல் முடிவரையில் கண்ணையோட்டித் தரிசித்தால் முருகனையும் அடி முதல் முடிவரையில் தரிசித்து விடலாம்.

வேல் ஞானமே உருவாகப் பெற்றது. ஞானசக்தி என்ற பெயருமுடையது. பராசக்தியால் வழங்கப்பெற்றது சக்தி அம்சமுடையது, இத்தனை வகையாலும் அதற்கு அமைந்த சிறப்புக்களை எண்ணியே அடைமொழியின்றி வேல் என்று மாத்திரம் சொன்னார் அருணகிரியார்.

**"ஆடும் பரி எனவும் வேல் எனவும் அணி சேவல் எனவும் பாடும் பணியையே என் வாழ்க்கைப் பணியாக அருள் செய்யவேண்டும்"** என்று பிரார்த்தனை செய்தார் அவர்.

பாடும் பணியைப் பெரிய பணியாகக் கொண்ட பெருமக்கள் தமிழ் நாட்டில் பலர் இருந்தார்கள். ஞானசம்பந்தர் முதலிய நால்வரும் பன்னிரண்டு ஆழ்வாரும் அந்தக்கூட்டத்தைச் சார்ந்தவர்கள்.

அருணகிரிநாதர் பாடும் பணியை வேண்டிப் பெற்றவர். பிறர் சென்ற வழியே போகாமல் புதிய துறையில் சந்தக் கவிமாரி பொழிந்தவர் அவர். பல பாக்களைப் பாடிய பின்பு பாடியது கந்தர் அநுபூதி. அவ்வளவு பாடியும் அவருக்கு மன நிறைவு உண்டாகவில்லை. மீண்டும் "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று வேண்டுகிறார்.

**தொடரும்.....**

## தை மகள் மலரும் நன் நாளினிலே தரணியில் கதிரவனை போற்றிடுவோம்

வையகத் தினுள்ளெம் வாழ்வுமிளிர
வளமா யெம்கமத் தொழிலோங்க
உய்திடும் பயிர்வகை உவகைதர
உழவர் மனங்கள் நிறைவுபெற
செய்நன்றி கூறிடும் எம்மரபில்
சேர்த்த நன்றிகளை நெறிப்படுத்த
தைமகள் மலரும்நன் நாளினிலே
தரணியில் கதிரவனைப் போற்றிடுவோம்!

மைவிழி மங்கையர் மனம்மகிழ
மருவியே மாட்சிமை நிறைந்தோங்க
பொய்யின்றிப் புவியெங்கும் நீதிமலர
பொலிவுயர் தமிழ்மொழி தழைத்தோங்க
நயமுறும் நம்தேசம் நம்பிக்கையாக
நானிலமும் நம்மக்கள் நலம்பெற்றேக
தைமகள் மலரும்நன் நாளினிலே
தரணியில் கதிரவனைப் போற்றிடுவோம்!

ஐயமுறும் எம்மக்கள் மனநலிவகல
அரனும் அம்பிகையும் அருள்சுரக்க
மெய்யால் சமாதானம் மலர்ந்திட
மேதினியில் ஈழவர் மகிழ்ந்திட
கையுரக்க கமம்செய் நம்முழவர்
கரம் நிறைந்த தனம்பெற்றிட
தைமகள் மலரும் நன் நாளினிலே
தரணியில் கதிரவனைப் போற்றிடுவோம்!

சுபமஸ்து

துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்

## வாழ வழிகாட்டும் அருட்பாடல்கள்




பொதுவான பாராயணம், கூட்டுவழிபாடுகளுக்குப் பயன்படத்தக்க அருட்பாடற் தொகுதிகள் பல எமது சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்தில் அன்பிற்குரிய ஒருவர் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்ட நேரத்தில், யாருக்கு யார் ஆறுதல் சொல்வதெனத் தெரியாது அங்கலாய்க்கின்ற அந்த நேரத்தில், மனத்துக்கு அமைதி தரக்கூடிய தோத்திரப் பாடல்கள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து இப்போது வெளியிடுகிறோம். குடும்பத்தில் உள்ளவர்களும், துக்கம் பகிர்ந்து கொள்ள வருகிறவர்களும் தனித்தும் கூடியும் பிரார்த்தனை செய்தற்கு இவை உகந்தவை.

இவ்வாறான கவலைமிகுந்த வேளையில் என்ன என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமலோ, தெரிந்தும் பதற்றத்தினாலோ குழப்பமுறுவது மக்கள் இயல்பு. அந்நேரத்தில் உதவக்கூடிய குறிப்புக்களும், இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள், விளக்கங்களும், தொடர்ந்து நடைபெறவேண்டிய காரியங்களும் இவ்வெளியீட்டில் இடம் பெறுகின்றன.

திரு.க.குணரத்தினம் அவர்கள் 13-09-2000 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். அவர் இருந்தபோது எமது சங்கத்துக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கினார். அன்னாரின் நினைவாக சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டின் விசேட வெளியீடாக இது வருகிறது. இலவச பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வெளியீட்டுத்துறைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்

– தொலைபேசி 020 8514 4732

# சைவக் கிரியைகள்

## கிரியைகளின் அவசியம்

கிரியை என்பது செய்கை எனப்பொருள்படும். புறச்செய்கைகளாலே நடத்தும் இறைவழிபாடு களுள்ளே கிரியைகள் அடங்கும். சைவமகன் ஒருவன் பிறந்த காலந்தொட்டுக் காலமாகும்வரை அவனுடைய வாழ்க்கையில் இடம்பெறும் சைவக்கிரியைகள் பலவாகும். இவற்றினை முறைமையுணர்ந்து செய்வது சைவமக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். வேதசிவாகமங்கள் சைவக்கிரியைகளின் விதிகளையும், விளக்கங்களையும் தருகின்றன. இக்கிரியைகளுள் மரணக்கிரியை பற்றி இவ்விதழில் சிறிது நோக்குவோம்.

## அபரக்கிரியை

ஆன்மாக்களின் ஆன்மார்த்த கிரியைகளில் அபரக்கிரியையும் ஒன்றாகும். அபரக்கிரியை உத்கிரார்த்தக் கிரியை, தேகாந்த சூர்ணோத்சவம், அந்தியேட்டி, நிவா பாஞ்சலி தருப்பணம், நக்கினதானம், அவமிருத்துப் பிராயச்சித்தம், புனர்தகனம், அஸ்திசஞ்சயனம், பாஷாணஸ்தாபனம்(கல்லெடுப்பு), இடபதானம், ஏகோதிட்டம், பஞ்ச தச மாசிகம், கோதா கும்ப சிராத்தம், சபிண்டீகரணம், மாசிகங்கள், ஆப்திகம், வருட ஆண்டுத் திதி, மகாளயம், மாத தருப்பணம் என்பனவாம்.

## அபரக்கிரியையின் நோக்கம்

அபரக்கிரியையாவது ஒருவர் இறந்தபின் அவருடைய நன்மைக்காக அவருடைய பிள்ளைகள் முதலியோராற் செய்யப்படுங்கிரியை. **(அபரம்–பிந்தியது)** அவரவர் செய்த வினையே அவரவருக்குப் பயன்படுமன்றி அவரது பிள்ளைகள் முதலியோர் செய்யும்வினை அவருக்குப் பயன்படுவதெப்படி என்ற கேள்வியுண்டு. அதற்கு விடையாதெனில், ஒருவர் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கதாகவே அவருக்குப் பிள்ளைகள் வாய்ப்பார்கள். அபரக்கிரியையின் பலனைப் பெறுதற்குரிய நல்வினை செய்தவன் அக்கிரியையைச் செய்யத்தக்க புதல்வரைப் பெறுவான். இவ்வுண்மையை

**எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.**

**தம்பொருளென்ப தம்மக்க ளவர் பொருள்**
**தந்தம் வினையான் வரும்.**

என்னுந் திருக்குறள்களிற் காண்க.

ஒருவர் வீட்டிற்குப் போகும் வறியவனுக்கு அவர் உணவு கொடுக்க, அவனுடைய பசிதீருகின்றது. அவர் அதைக் கொடுக்க நேர்ந்தது அவன்செய்த நல்வினைப் பயனே. அது போலப் புதல்வர் முதலானோர் இறந்தவர்களுக்குச் செய்யுங்கிரியைகள் அவர்களுக்கு நன்மையாகின்றன. இவர்கள் செய்தற்குக் காரணமாயிருப்பது இறந்தோர் செய்த நல்வினையே. ஆதலால் புதல்வர்செய்யும் அபரக்கிரியை, இறந்தோர் செய்த நல்வினையின் பலனைச் சேர்த்தற்குள்ள வழியே. புதல்வனுக்குப் புத்திரனென்ற பெயர்வந்தது நரகவேதனை யினின்றும் நீக்கத்தக்கவனாதலினாலென்க. தாய் தந்தையாருக்குச் செய்ய வேண்டிய கடன்களைப் பிள்ளைகள் தவறாது செய்தல்வேண்டும். அவர்கள் உயிரோடிருக்கும் பொழுது அவர்களுக் காக வேண்டியவற்றை என்ன பாடுபட்டுஞ் செய்ய முயலவேண்டும். இது மிகப் பிரதானமாம். இறந்த பின்னும் ஆக வேண்டிய கிரியைகளை அன்போடும் ஆவலோடுஞ் செய்தல்வேண்டும்.

சூரபன்பனுடைய மகனாகிய இரணியனது செயலைப் பிள்ளைகள் யாவருஞ் சிந்திக்க வேண்டும். போர் நடந்து வந்தகாலத்திலே அசுரர்கள் யாவரும் இறப்பது திண்ணமெண்பதை இரணியன் அறிந்து கொண்டான். அவனும் போருக்குப் போய் மாண்டாற் சூரனுக்காவது தம்பியர்க்காவது மற்றவர்களுக்காவது அபரக்கிரியை செய்தற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். இதை உணர்ந்த இரணியன் போருக்குப்போகும் ஆசையைத் தடுத்துப் போருக்குப் போகாததால் உண்டாகும் அவமானத்தைக் கருதாமல் அபரக்கிரியை செய்தலே தன்னுடைய பெருங்கடனாகக் கொண்டு போருக்குப் போகாமல் மறைந்திருந்தான்.

சமய தீட்சை பெற்றவர்களுக்கே மரணக்கிரியை தக்கதாம். முன்னர்க் கூறியபடி, சைவ சமயத் தீட்சை பெறாதவன் சைவன் ஆகான். எனவே, தீட்சை இல்லையேல் கிரியையும் இல்லை. மேலும் புலால் உண்ணுகிறவர்களுக்கும் தொடக்குக் கழியும் நாளிலே மரணக்கிரியைகள் தர்ப்பையிலே செய்யப்படுகின்றது. இருப்பினும், அவ்வுடலுக்கு அபிஷேகமும், சிவாக்கினியும் நடைபெறும். சுத்தசைவர்களுக்கு நடைபெறும் கிரியைகளில் மேற்கூறியவாறு ஒழுங்கு முறைப்படி நிகழ்வனவற்றைக் கீழே தருகின்றோம். சுத்த சைவர் என்னும்போது உணவு வகையினாலும், சைவ அனுட்டானங்களினாலும் மேம்பட்டோரையே இங்குக் குறிப்பிடுகின்றோம்.

## உத்கிரார்த்தக் கிரியை

அஃதாவது, உயிர் உடலைவிட்டு மேற்செல்லும் போது செய்யும் கிரியையாகும். உயிர் பிரியும் நேரத்தில் தேவாரம், திருவாசகம் முதலான திரு அருட்பாடல்களைப் பாடுவதும், திருநீறு, உருத்திராக்கமாலை ஆகியவற்றை அணிதலும், பஞ்சாட்சர மந்திரத்தைக் காதில் ஓதுவதும், தானங்கள் வழங்குதலும் நல்லது. இவை பல முறை செய்தல் நேரிடும். இருப்பினும், அவ்வப்போது செய்தல் நல்லது.
உயிர் உடலைவிட்டு நீங்கியதும் தரையிலே அல்லது உயரமான ஒரு பலகையிலே தருப்பை பரவித் **தெற்கே** தலை வைத்துப் படுக்கவைத்தல் வேண்டும்.

## தேகாந்த சூர்ணோற்சவக் கிரியை

இது இறந்தவருடைய வீட்டில் அவருக்காகச் செய்யப்படும் கிரியை. முற்றத்திற் பந்தலிட்டு, அப்பந்தரை மாவிலை, மகரதோரணம், மலர் மாலைகளால் அலங்காரஞ்செய்தல் வேண்டும். நடுவில் அக்கினி குண்டமும் அதற்கு மேற்கே நெல், அரிசி, உழுந்து, பயறு, எள் முதலியன பரப்பப்பட்ட மேடையில் ஒரு கும்பமும் அதனைச் சூழ எட்டுக்கும்பங்களும் வைத்துப் பூசித்தல் வேண்டும். இறந்தவரின் தீட்சைக்கு ஏற்ப சமய தீட்சிதருக்கு உருத்திர மூர்த்தியையும், விசேட தீட்சிதருக்கு ஈஸ்வரமூர்த்தியையும், நிருவாண தீட்சிதருக்கும் சதாபிஷேகம், ஆச்சாரியாபிஷேகம் பெற்றவர்களுக்கும் சதாசிவமூர்த்தியையும் நடுக்கும்பத்திற் பூசித்தல் முறையாகும். எட்டுக்கும்பங்களும் **ஈசானன், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கினி, இந்திரன்** ஆகிய அட்டதிக்குப் பாலகர்களைக் குறிப்பன.

மண்டபத்துக்குக் கிழக்கே உரலையும் உலக்கையையும் அலங்கரித்து உரலினுள் மஞ்சளும், அறுகுமிட்டு வைத்திருத்தல் வேண்டும். அதனுடன் பேரிகை அல்லது மணி வைத்துக் கொள்ளல் வேண்டும். இறந்த உடலுக்கு அபிடேகஞ் செய்தற்கு வேண்டிய அபிடேகப் பொருள்களையும் ஓரிடத்தில் வைத்துக்கொண்டு கிரியை செய்தற்குரிய கர்த்தா, நீராடிச் சந்தியா வந்தனம் முடித்து வந்ததும் குரு மூலம் சங்கற்பம் செய்து கிரியைகளைத் தொடங்குதல் வேண்டும்.

இக்கிரியை இரண்டு வகையாக அமையும். ஒன்று ஔத்திரி தீட்சைக்குரியவர் அல்லது அத்தீட்சையைப் பெற்றவர் ஒருவருக்குச் சூர்ணோற்சவத்தை அங்கமாகவுடைய அந்தியேட்டியைச் சரீரத்திலே செய்தல். இது மயானத்திலே தொடர்ந்து நடைபெறும். மற்றது மாமிசம் புசிப்பவர்களுக்குச் சரீரத்தில் அந்தியேட்டி செய்யாது பின்னர்த் தருப்பையிலாகிய பிரதி சரீரத்தில் செய்வதாகும். இதன் நோக்கம் மாமிசம் புசிப்பவர்களும் சில நாட்களாவது அதனை விடுத்து ஒழுகியமையால் அவற்றின் பயனை அடைய செய்யவேண்டுமென்ற நல்நோக்கத்துக்காகவேயாம். இதனால் மாமிசம் உண்பவர்க்கு இறந்தபின் சூர்ணோற்சவஞ் சேர்ந்த சிவாக்கினி காரியஞ்செய்து சிவாக்கினியால் உடலைத் தகனஞ்செய்து பின்னர் தொடக்கு(ஆசௌச) முடிவில் அந்தியேட்டியைப் பிரதி சரீரத்தில் செய்து புனர் தகனஞ் செய்வித்துக் கிரியை நடாத்துதலே வழக்கமாகும்.

**தொடரும் . . . . .**

# THE POWER OF MANTRAS

***- a scientific view -***

***by Dr. Shan Ranjit***

**WHAT ARE MANTRAS?**

What is a Mantra? A Mantra can be described as a 'sound symbol' that has the power to effect a beneficial transformation. In Mantra, ' Ma ' means manana and ' Thra ' means saving. It means that one, which saves the man caught up in the coils of this worldy life which is infested with death, grief and pain.

The vibrations that emanate from the mantras have energy that draws the divine closer to the devotee. The vibrations from the mantras have the power to redress and cure all our ills. However, when the mantras are said they should deeply arise and come from our hearts, not merely from our lips. To day, the atmosphere is polluted by bad thoughts. When these mantras are said, the vibrations enter the atmosphere and purify the bad thoughts, which is in the form of energy. Mantras should be uttered in utter humility to the divine.

(இ) பக்தர்கள்----------- கொண்டு மாவிளக்கேற்றி வணங்குவார்கள்.

# BE CHEERFUL, BE HAPPY

The nature of the mind is to entertain 'likes & dislikes'. When our likes are satisfied we are joyful, happy. But when we meet with dislikes we are unhappy, sorrowful. All our life we pick up what we like & avoid what we dislike. When summer is there we are joyful, when winter comes we are miserable; when traffic is smooth we are happy, when there is a traffic jam we are sorrowful and so on. Thus one is constantly affected by the joys & sorrows arising from the world.

But it always need not be so. The ideal way to function is not to be affected by these fluctuations in life. Look at the life of Lord Krishna. Always bubbling with cheer and enthusiasm. He was born in a prison; throughout his childhood his own uncle was trying to kill him; he had to face several demons; he fought the Kurukshetra war unarmed. Yet not for a moment was he sorrowful. He never let the troublesome situations affect his cheer. None of us was born in a prison; none of our uncles are our enemies, yet we complain and grumble constantly. Understand that life means joy & sorrow. When sorrow comes understand that joy will follow. Similarly when joyful, understand sorrow will follow. Therefore you don't allow sorrow to affect you. Thus you can be cheerful and peaceful in life.

# தைப்பொங்கல்

தமிழர் தம் பண்டிகை விழாக்களில் முதன்மைச் சிறப்பு பெறும் பண்டிகையாய் தைப்பொங்கல் அமைகின்றது. இறைவனுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய சந்தோஷ தொடர்பை ஏற்படுத்தும் நிகழ்வாய் விரதங்களும் விழாக்களும் அமைகின்றன. அந்த வகையில் தைப்பொங்கல் சூரியபகவானுக்கு நன்றி தொவித்துப் பூஜிக்கும் விழாவாகவும் உழவர் தம் மகிழ்வு பெருவிழாவாகவும் தைப்பொங்கல் எனும் பண்டிகை சிறப்புப் பெறுகின்றனது. நம் வாழ்வில் நாம் கண்டு வாழும் மாதங்கள் பன்னிரெண்டு. அவற்றைச் சேர்த்து ஒருவருடம் என வகுக்கின்றோம். இந்த ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகின்றது. அந்த வகையில் உத்தராயணம் என்று சொல்லப்படுகின்ற ஆறு மாதகாலம் தை மாதம்தொடக்கம் ஆனிமாதம் வரையான காலங்கள் தேவர்களின் பகற்பொழுதும் தெட்சணாயனம் எனப்படும் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையான ஆறுமாதகாலம் இரவுப் பொழுதுமாய் அமைகின்றது. எனவே இரவுப்பொழுதில் மறைந்து காலைப்பொழுதில் பொன்கதிராய் மலரும் சூரியனை தேவர்களும் வரவேற்று உபசரித்து பூஜிப்பார்கள் என்பது உண்மை. அந்த நாள் எமக்குத் தைப்பொங்கல் திருநாளாய் அமைகின்றது. உலக வாழ்வியலில் உழவர் இல்லையேல் மனிதர் உயிர்வாழ முடியாது. உழவுத்தொழில் அத்தகைய தெய்விகம் பொருந்தியதாகும். அந்த உழவரின் பயிர் செழிப்பிற்கு திருவருள் தரும் தெய்வமாய் விளங்கும் சூரியபகவானுக்கு உழவர் தம் நன்றியைத் தெரிவிக்கும் விழாவாகவும் சிறப்புப் பெறுகின்றது. அனைத்து தமிழ்மக்களும் தைப்பொங்கல் திருநாளான, இத்திருநாளை புதுப்பொலிவோடு வரவேற்று கொண்டாடுகின்றார்கள். எனவே நாமும் தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்வோம்.

**துளசிஜா ஸ்ரீஸ்கந்தராஜா**
இலண்டன் தமிழ் நிலையம் (ஆசிரியர் திருமதி பிரபாகரன்)



சித்திரம் வரைந்தவர் -
அர்ச்சனா குணசேகரம்

# ஆலய வழிபாடு

ஆன்மா ஒன்றித்து நிற்கும் இடம் ஆலயம் எனப்படும். ஆலயத்திற்குச் சென்று நாம் இறைவனை வழிபடவேண்டும். இறைவனை வழிபடுவதனால் எமக்கு இறைவன் அருள்கிடைக்கும். ஆலயத்திற்குச் சென்று ஓடி விளையாடுதல், வீண்பேச்சு போன்றவை கூடாது. தினந்தோறும் ஆலயம் செல்வது மிகவும் நல்லது. தினந்தோறும் செல்லமுடியாதோர் வெள்ளி, செவ்வாய், போன்ற தினங்களிலும் விசேடதினங்களிலும் சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். சைவ சமயத்தவர்களுக்கு தீட்சை பெறுதல் ஒரு சடங்காகும். உண்மையான சைவசமயி என்றால் அவர் தீட்சை பெற்றிருக்கவேண்டும். தீட்சையை ஒரு தகுந்த குருவிடமே பெற வேண்டும்.

ஆலயம் என்பது ஒரு புனிதமான இடம். அவ்விடத்திற்குச் செல்லும்போது நாம் ஒவ்வொருவரும் நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்த, பூசைப்பெருட்களைச் சுத்தமான ஒரு தட்டிலே எடுத்துப் புனிதமாகச் செல்லவேண்டும். கொடி மரத்துக்கு முன்னால் வீழ்ந்து வணங்கி நந்திதேவரிடம் சிவனையும், உமையையும் தரிசிப்பதற்கு அனுமதி வேண்டியே செல்லவேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். இருபாலருக்கும் உரியநமஸ்காரம் தியாங்க நமஸ்காரம் ஆகும். எனவே நாம் எல்லோரும் ஆலயம் சென்று இறையருள் பெறுவோமாக.

**ஜெ.லாவண்யா**
கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், இலங்கை

**கலசம் இதழ் 40 இல் வெளியான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதி எமக்கு அனுப்பினோர் விபரம்:**

| | |
|---|---|
| துளசிஜா ஸ்ரீஸ்கந்தராஜா | -London Tamil Centre |
| வானதி சுந்தரமூர்த்தி | -North London Tamil School (Edmonton) |
| ஆர்த்தி பகீரதன் | -North London Tamil School (Edmonton) |
| ஜெ.லாவண்யா | -கொழும்பு-02 |
| செ.அகிலேஸ்வரி | -கொழும்பு-02 |
| லக்ஷினி/ரோஷினி பஞ்சலிங்கம் | -Nalvar Tamil Academy |
| ஆரிகா சர்வநாதன்/கிருத்திகா நடராஜா | -Nalvar Tamil Academy |
| பிரதீபா ஸ்ரீரங்கநாதன் | -West London Tamil School |
| சிவரூபன் மாணிக்கவாசகன் | -Wimbledon |
| சிவகாந்தன் மாணிக்கவாசகன் | -Wimbledon |
| மௌலி மணிவண்ணன் | -Croydon |
| கிருத்திகா பத்மராஜா | -Wimbledon |

**கலசம் இதழ் 39 இல் வெளியான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதி எமக்கு அனுப்பினோர் விபரம்: (சென்ற இதழ் தொடர்ச்சி)**

| | |
|---|---|
| வா.ஜெகதீஸ்வரி | -சுழிபுரம் |
| ஆர்த்தி பகீரதன் | -North London Tamil School (Edmonton) |
| பிரணவன் ஸ்ரீரங்கநாதன் | -West London Tamil School |

**தனிப்பட எழுதி அனுப்பியோர்**

| | |
|---|---|
| கலைச்செல்வி மகாலிங்கம் | -Croydon |
| வதனி சந்திரமோகன் | -Croydon |
| ரூபிணி கதிர்காமநாதன் | -East ham |
| பவன் குலேந்திரன் | -Wimbledon |

# Better Prizes from this Issue!

## *1st Prize worth £25.00!*
## *2nd Prize worth £15.00!*
## *3rd Prize worth £10.00!*

**Prize draw will take place at SMS puja.**
**The help of parents & teachers is necessary for this project.**
**(All the answers can be found within this magazine itself)**

**கலசம் இந்த இதழின் பரிசுப் போட்டிக்கான வினாக்கள்–** முடிவுத்திகதி–(28–02–2003)

1) நடராஜரின் திருநடனத் தத்துவத்தை உலகறியச் செய்த தமிழர் யார்?

..........................................................................................................

2) கதிர்காமம் என்பதன் பொருள் என்ன?

..........................................................................................................

3) மெய்கண்ட சாத்திர நூல்கள் எத்தனை?

..........................................................................................................

4) What are God's five functions?

..........................................................................................................

5) What are the six aspects of Mantras?

..........................................................................................................

6) Who did Lord Murugan sent as messenger to Surapadman?

..........................................................................................................

7) When should we celebrate Thai Pongal?

..........................................................................................................

8) What do we learn by the story "God is every where"? (page 23)

..........................................................................................................

9) In what form did God manifest on Sivarathri night?

..........................................................................................................

10) What does the word Pongal mean?

..........................................................................................................

***(All the answers can be found within this magazine itself)***

---

# கலசம்
**KALASAM**

இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா ?

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள் !

பெயர்: ..........................................................

முகவரி: ..........................................................

..........................................................

..........................................................

Donation: £............

Postage: £............

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Kalasam@hotmail.com

**Postage:** £5 (U.K);£10 (Rest of the world) ( இரு வருடங்களுக்கு)

# M. K. Sri & co

## SOLICITORS & ADMINISTRATORS OF OATHS

**2C, FAIRHOLME ROAD, (OFF STATION ROAD)**
**HARROW, MIDDLESEX HA1 2TN**
**Tel: 020 8515 7000 (4 Lines) Fax: 020 8515 7030**
**Fax: 020 8515 7031 (for conveyancing only)**
**DX: 4232 Harrow (1)**

# We Specialise in

• Immigration • Crime • Conveyancing
• Matrimonial • Traffic Offences • State Benefits
• Wills & Probate • Employment

**Advice & Assistance at Police Station**
**Legal Aid Work Undertaken**

**OUR NEW SERVICE : WORK PERMIT SCHEME**
**Advantages**

To enter work and live in the UK through the work permit scheme
Applies to all whether in the UK or in any part of the world
Switching allowed from Visitors, Student and Dependant Visas
Change of Employment afterward is possible
Permanent Residency in the UK is possible after 4 years of work permit employment

We are franchised by the legal services commission in immigation

**Partners**
**M. K. Sritharan**
**S. Sivasanthiran**

**Assistant Solicitor**
**Selvi Ravindran**

**Trainee Solicitors**
**Avtar Manku**
**V. Karunasaagarar**

Consultants: Indra Sebastian LLM & Mannan Thangarajah LLM

# KUMARANS

KUMARANS

# குமரன்ஸ்

**Imports & Exports, News Agent, Off Licence & Grocery**

**Kumarans Limited**
**142 Hoe Street**
**Walthamstow**
**London E17 4QR**

**Tel: 020 8530 3033**
**020 8521 4955**
**Fax:020 8521 5655**
**020 8521 9482**

**136 Hoe Street**
**Walthamstow**
**London E17 4QR**

**Tel: 020 8520 5960**
**Fax: 020 8530 5655**

**144 Hoe Street**
**Walthamstow**
**London E17 4QR**

**Tel: 020 8521 4411**
**Fax: 020 8530 5655**

லீலா

லீலா தயாரிப்புக்களின் ஏக
விநியோகஸ்தர்கள்

உங்களுக்கு அன்றாடம் தேவையான
லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கிச் சிக்கனமடையுங்கள்

FREE PARKING AVAILABLE
FOR OUR CUSTOMERS

Branches at:

**69 Holloway Road**
**London N7**

**Tel: 020 8609 1912**
**Fax: 020 8609 0501**

**243 Hoe Street**
**Walthamstow**
**London E17 4QR**

**Tel: 020 8520 6210**
**Fax: 020 8520 6366**

**532-536 Forest Street**
**Walthamstow**
**London E17**

**Tel: 020 8925 7720**
**Fax: 020 8925 7721**

Manufacturers & Installers of
Quality Double Glazing & Shop Fronts
General Building Work & Kitchen Fittings

PRIMA

# PRIMA WINDOWS



Double Glazing (Aluminium or UPVC) & Shop Fronts & Shutters at competitive prices. We also do General Building Work, including Extensions, Conversions & Grant Work.

**Contact us for a price to suit your budget!**

## Prima Windows Limited

**1-3 Shrewsbury Road,London E7**

## Tel: 020 8472 5553

## Mobile: 07956 542717

Est. 1992

# Ruby's Catering Services

**Freephone: 0800 635 1014**

## Your right choice for Professional Catering...

**We cater for all occasions**

**We do one stop complete party service**

• Hall Decoration • Party Gear • Waiter Hire • Floral Decoration
• Catering Disposables • Photography, Limo Hire & DJ

## High Quality Sri Lankan & South Indian Food Caterers

கடந்த 10 வருட காலமாக லண்டனில் Catering சேவை செய்து வரும்
**RUBY'S CATERING SERVICES**, இச் சேவையில் முன்னணியில் இருப்பதற்கான முக்கிய காரணங்கள்:

★ சகல விதமான வைபவங்களுக்கான தரமான சுவையான உணவைத் தயாரித்து வழங்கி கேற்றரிங் சேவை ஆற்றியதில் 10 வருட கால அனுபவம்.



★ முழுவதுமாக 45 வருட கால அனுபவம் கொண்ட Food Hygiene & Safety இல் சித்தியெய்திய சமையல் நிபுணர்கள்.

★ 30 விருந்தினர்கள் அல்லது 3000 விருந்தினர்களானாலும் உணவு சமைக்கக் கூடிய இடதளபாட வசதி. Buffet type மூலமாகவோ, அல்லது Sit-in Waiters Service மூலமாகவோ பரிமாறுவதில் தேர்ச்சி பெற்றவர்கள்.

★ லண்டனில் பல 5 Star Hotel களுக்கு Catering சேவை ஆற்றிய அனுபவம்.

★ திருமண வைபவம், அரங்கேற்றம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு உங்கள் விருப்பத்திற்கேற்ப சைவ உணவு அல்லது சிற்றுண்டி வகைகள் போன்றவற்றை ஊாடைட பண்ணி பெட்டியில் pack பண்ணக்கூடிய வசதி.

**எமது இதர விசேட லண்டன் தயாரிப்புகளான:-**

★ ரூபிஸ் பகோடா
★ சீனி முறுக்கு
★ பயித்தம் உருண்டை
★ பருத்தித்துறை வடை
★ யாழ் மிக்சர்
★ மில்க் ரொபி
★ அச்சு முறுக்கு
★ ரூபிஸ் மிக்சர்

மேற் குறிப்பிட்ட பலகாரங்களை உங்களின் விழாக்களுக்கு நீங்கள் விரும்பியவாறு பக்கற் பண்ணி மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ பெற்றுக் கொள்ளலாம்
இப் பலகார வகைகளை சகல தமிழ்க் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

99A Regina House, Regina Road, Southall, Middx. UB2 5PW
Tel: 020 8571 3403 / 020 8574 2401 Mob: 07748 772534
email:info@rubyscatering.com • www.rubyscatering.com.

# செய்திகள்..!

## ஐந்தாவது சைவ மாநாடு

இலண்டன் வாழ் சைவ மக்கள் சமீபத்தில் மூன்று சைவ ஆதீனத் தலைவர்களை ஒரே மேடையில் தரிசிக்கவும், அவர்களின் அருளுரைகளைச் செவிமடுக்கவும் பேறுபெற்றிருந்தனர். யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தமிழ்நாடு, கோவை பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசுவாமி அடிகளார், இலண்டன் மெய்கண்டார் ஆதீனத் தலைவர் தவத்திரு சிவநந்தி அடிகளார் ஆகிய முப்பெரும் சைவச் சான்றோர்கள் பிரித்தானிய திருக்கோவில்கள் ஒன்றியம் 2002 ஒக்டோபர் 26,27 தேதிகளில் ஒழுங்கு செய்திருந்த ஐந்தாவது சைவ மாநாட்டில் கலந்து அருளுரை வழங்கினார்கள். இரு தினங்களிலும் முறையே உயர்வாசற்குன்று முருகன் ஆலய கல்யாண மண்டபத்திலும், லூயிசம் சிவன் கோவில் மண்டபத்திலும் மாநாடு நடைபெற்றது. ஒன்றியத் தலைவர் DR.T. சிறீஸ்கந்தராசா தலைமை தாங்கினார். தினமும் மங்கள விளக்கு, ஏற்றுதல் நந்திக்கொடி ஏற்றுதல், திருமுறைப் பாராயணம், சிவாசாரியர்களின் ஆசியுரைகள் என்பனவற்றுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. ஆதீன முதல்வர்களின் அருளுரைகளும் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி எஸ். பத்மநாதன், தமிழ்நாடு விழுப்புரம் அண்ணா அரசு கலைக்கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி மலர், உயர்வாசற்குன்று முருகன் ஆலய சிவாசாரியார், இலண்டன் சிவன் கோவில் சிவாசாரியார், இன்னும் அறிஞர் பெருமக்கள் சிலரின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இலண்டன் வாழ் இளம் தலைமுறையினரும் ஈடுபாட்டுடன் கலந்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் மாலை கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆங்கிலத்தில் நடைபெற்றது. இசை நிகழ்ச்சிகள் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. நல்லை ஆதீன பணிகளுக்கு உதவும்முகமாக ஒன்றியம் ஒரு தொகைப் பணத்தை ஆதீனத்துக்கு வழங்க முன்வந்துள்ளமை போற்றத்தக்கது.

## திருவாசக முற்றோதல்

இவ்வருடம் விம்பிள்டன் கணபதி ஆலயத்தில் திருவெம்பாவைக் காலத்தில் (14– 15. 12. 2002) சனி ஞாயிறு இரண்டு நாட்களிலும் திருவாசகம் முழுவதுமாகப் பாராயணம் செய்யப்பட்டது. ஆண்களும் பெண்களுமாகப் பல அடியவர்கள் கலந்து கொண்ட இம் முற்றோதலில் ஒவ்வொருவரும் தொடர்ந்து திருவாசகப் பாடல்களைப் பாடினர். சனிக்கிழமை திருவாசகத்தின் சிறப்புக்களை விளக்குவதாகச் சொற்பொழிவும் இடம் பெற்றது. தொடர்ந்து வருடந்தோறும் இவ்வாறான முழுமையான திருவாசகப் பாராயணம் நிகழும் எனத் தெரிகிறது.

## மாணிக்கவாசகர் விழா

வருடந்தோறும் திருவெம்பாவை நாட்களுள் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் நிகழும் மாணிக்கவாசகர் விழா இம்முறையு 14–12–2002 சனிக்கிழமை கோவில் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது விழாவில் திருவாசக பாராயணம் , சிறப்புச் சொற்பொழிவுகள், சிறுவர் நிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெற்றன

# என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயம்

இந்து தமிழ்க் கலாசாரச் சங்கம் (என்பீல்ட்) என்பீல்ட் பகுதியில் அம்பிகைக்கு ஒரு ஆலயம் அமைப்பதை இச்சங்கத்தினர் தமது முதற்பணியாக மேற்கொண்டனர். இவர்களது அயராத முயற்சியால் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயம் என்ற பெயரில் அம்பிகை வழிபாட்டிற்கு வழிசமைக்கப்பட்டது. 12-07-2002 முதல் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 7.00 மணி முதல் 10.00 மணிவரை மால்டன் வீதியில் உள்ள ஞாபகார்த்த மண்டபத்தில் (Memorial Hall, Maldon Road, Enfield, N9 9QP) அம்பாளுக்கு அபிடேகம், பூசை, அர்ச்சனை வழிபாடுகள் நடைபெறுகின்றன. கடந்த 25.10.02 வெள்ளிக்கிழமை அழகிய உற்சவ மூர்த்தி அம்பாள் விக்கிரகம் ஒன்றைத் ஸ்தாபித்து நூதன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது.

இவ்வாலயத்தின் பரிபாலன செலவு தவிர்ந்த முழு வருமானமும் தாய்நாட்டில் அல்லறும் நம் உறவுகளின் முன்னேற்றப் பணிகளுக்கே செலவிடுவதென்ற ஆலய தர்மகர்த்தாக்களின் ஏகமுடிவாகும். பூசைவழிபாட்டுடன் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

இந்து தமிழ்க் கலாசாரச் சங்கம் (என்பீல்ட்)
**தொலைபேசி 020 8360 9577**


UNACCOMPANIED BAGGAGE- PERSONAL EFFECTS, HOUSE HOLD GOODS, VEHICLES, MACHINERY, ETC.

TO COLOMBO AND WORLD WIDE DESTINATIONS

Srilankan

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

ALL YOUR GOODS GO TO OUR BONDED WARE HOUSE IN COLOMBO

WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES

**GLEN CARRIERS LIMITED**

TEL : 020 8740 8379/ 020 8749 0595

IATA

FAX : 020 8740 4229

4395

BONDED WARE HOUSE

LAKSIRISEVA, 66 NEWNUGE RD, PELIYAGODA

14 Allied Way, Off Warple Way, Acton, London, W3 0RQ

# பெரியபுராணத்தின் உட்பொருள் - விறன்மிண்ட நாயனார் -

சேரநாட்டில் வளம் நிறைந்த ஊர் செங்குன்றூர். அங்கு சிவபெருமான் திருவடிகளில் மாறாத பக்தி பூண்ட விறன்மிண்டர் என்பார் ஒருவர் இருந்தார். சிவனிடத்து மட்டுமன்றிச் சிவனடியாரிடத்தும் பேரன்பு பூண்டவர். சிவஸ்தலங்கள் பலவற்றையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் வந்தார். அந்நாளில் அங்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைத் திருமணம் செய்து, திருவாரூர்ப் பெருமானைக் காலந்தோறும் வழிபடும் நியமம் கொண்டிருந்தார். தேவாசிரிய மண்டபம் என வழங்கப்படும் ஆயிரக்கால் மண்டபம் ஒன்று கோவிலில் உண்டு. அம்மண்டபத்தில் சிவனடியார்கள் கூடியிருப்பார்கள். கோவிலுக்குச் செல்லுவோர் யாவருமே இவ்வடியார்களை வழுத்தி வணங்கியே பெருமானை வழிபடப்போவார்கள்.

அன்றொரு நாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுவாமி தரிசனத்தின் பொருட்டுக் கோவிலுக்கு வந்தார். அவர் தேவாசிரிய மண்டபத்தைக் கடந்து போகும்போது அங்கிருந்த அடியவர்களை வணங்காது போவாராயினர். இச்செயலை அவதானித்த விறன்மிண்டர், "இங்குள்ள மெய்யடியார்களை உதாசீனம் செய்து போகின்ற அவன் யார்?" என அருகில் நின்றிருந்தவர்களைக் கேட்டார். அவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் போகிறார்கள் என்றனர். "அப்படியா? அவன் எமக்கெல்லாம் புறகு" என்றார். அருகிருந்தவர்கள் "சுவாமி அவர் எம்பிரானாலாயே தடுத்தாட்கொள்ளப் பெற்றவர். அன்றியும் அவர் தம்பிரான் தோழனுமாவார்" என்றனர். "அப்படியானால் அந்தத் தம்பிரானும் எமக்குப் புறகே" என்றார். இந்தச் சம்பாஷணை சுந்தரர் காதிலும் விழுந்தது. திடுக்கிட்டார். தம் தவற்றை உணர்ந்தார். இறைவனைப் பிரார்த்தித்து "இந்த மண்டபத்தில் உள்ள அடியவர்களின் பெருமை அறியாதவனானேன். இவர்களுக்கு என்று நாம் அடியவனாவேன்? இவர்களை எவ்வாறு அறிந்து எவ்விதம் துதிப்பேன்?" என்று கவன்றார். அப்போது ஆரூர்ப் பெருமான் அசரீரியாக **தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்** எனத் தொடங்கிப் பாடிப் பணிவாயாக என்று அருளி சுந்தரர் உள்ளத்து அவர்கள் பெருமையையும் உணர்த்தியருளினார். உடனே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடிப் பணிந்தார். விறன்மிண்டர் சுந்தரரின் அன்புள்ளத்தைத் தெரிந்து கொண்டார்.

இவ்வாறாகத் தேசம் உய்யத் திருத்தொண்டத்தொகை சுந்தரர் அருளிச் செய்யக் காரணராய் இருந்த விறன்மிண்டர் சிலகாலத்தின்பின் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

சிவனிடம் பக்தி கொண்டவர்கள் அவனடியார்களிடமும் பக்தியுடையவராகவே இருப்பர். அடியவர்களை அவமதித்து சிவனைப் பூசிப்பவர்கள் எந்தவித பயனும் அடையார்கள். அவர்களுக்கு சிவாநுபூதி உணர்வு ஏற்படாது. விறன்மிண்டர் சிவனடியார்பால் உறைத்த பக்தி பூண்டிருந்தவர். அதனாலன்றோ தேவாசிரிய மண்டபத்தில் இருந்த அடியவர்களை வணங்காது சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை மட்டுமன்றி, அவரை வலிய ஆட்கொண்ட சிவபரம்பொருளையுமே அடியார் திருக்கூட்டத்திற்குப் புறகு என்று விலக்கினார். சிவனையே புறகு என்று தற்போதத்தினால் இவர் கூறினாரில்லை. சிவானுபவம் மேலிட்டு சிவாதீனமாய் நின்றாராதலின் இவர் கூற்று சிவன் கூற்றேயாம். சிவபெருமான் தன் அடியாரிணக்கம் இல்லாதவிடத்து பிறவிக் கடல் நீந்தி உய்வடைதல் கூடாமையை நாம் உணர்ந்து கொள்ளவே சுந்தரரைக் கொண்டு திருத்தொண்டத் தொகை பாடுவித்தார். அதன் மூலம் சிவனடியார் தம்மிடத்துக் கொண்ட அன்பின் ஆழத்தையும் அவ்வன்புக்குத் தாம் அருளும் திறத்தையும் நாம் உணர்ந்து அவ்வழி உய்வடையும் பொருட்டு விறன்மிண்டரிடத்து ஆவேசித்து நின்று கூறியது என்பது தேற்றம்.



உ
கணபதி துணை

# குறோய்டன் ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்
# Shree Sakthy Ghanapathy Temple

**21 Brigstock Road, Thornton Heath,**
**Croydon,Surrey CR7 7JJ**

*திருக்கோயில் திறந்திருக்கும் நேரங்கள் :*
*காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை*
*மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை*

**Tel: 020 8689 3466**

**அன்பர்களின் அல்லல் தீர்த்து அஷ்டசித்திகளையும் அருளும் அருள்மிகு சக்தி கணபதி**

இலண்டன் குறோய்டன் தொண்டன்கீர்த் பதியில் கடந்த 27-01-2002 உருவாகிய சக்தி கணபதி ஆலயம் 17-01-2003 தனது ஒருவருட நிறைவாக வருஷாபிஷேக மணவாளக்கோல உற்சவத்துடன் சிறப்புறுகிறது.

சக்தி கணபதியாலயம் இராமநாத வாகீஸ்வரக்குருக்களின் சிந்தனையுடனும் பல அன்பர்களின் செயற்பாடுகளுடனும் இணைந்து மகா சக்தி பெற்று மஹா கும்பாபிஷேகப் பிரதிஷ்டை வைபவம் நிகழ்ந்தது. சக்திகணபதி என்பதற்கேற்ப மூலவிநாயகரின் திருவுருவமும் பொலிவு பெற்று அமைந்ததும் சிறப்பு அம்சமாகும்.
விநாயகப்பெருமான் தனதருகே அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரப் பெருமான், மீனாட்சி அம்பிகை, வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப்பெருமான், சாமுண்டாதேவி சமேத பைரவப் பெருமான், நந்திகேஸ்வரர், நவக்ரஹ தேவர்கள் முதலாய் தேவர்கள் புடைசூழ நடுநாயகராக வீற்றிருந்து வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் வழங்கி அருள்பாலித்து வருகிறார்.

ஆலயத்தின் ஓராண்டுகால அருட்பணியில் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பலவிதமான திருவிழாக்கள் சிறப்பாக நடந்தேறின. அத்துடன் ஆலயத்தில் உபாகர்ம வைபவம், காயத்திரி ஹோமம், கஜமுகசம்ஹாரம், என்பனவும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. மார்கழி திருவெம்பாவையைத் தொடந்து 01-01-2003 ஆங்கில வருடப்பிறப்பை முன்னிட்டு விசேட பூஜைகளும், 14-01-2003 அன்று தைப்பொங்கல்விழாவும், 17-01-2003 வெள்ளிக்கிழமை வருடாபிஷேகமும், அதனைத்தொடர்ந்து மணவாளக்கோல விழாவும் 18-01-2003 அன்று தைப்பூச விழாவும், 01-03-2003 அன்று மஹாசிவராத்திரி விழாவும் நிகழஇருக்கின்றது. குறோய்டன் சக்தி கணபதி ஆலயத்தில் ஆவணி மாதம் தொடக்கம் கார்த்திகை தீபம் வரையும் தினமும் 108 தீபங்கள் ஏற்றப்பட்டு சர்வாலயதீபத்துடன் இலட்ச தீபவிழா நிகழ்த்தப்பட்டமை மிகவும் சிறப்புவாய்ந்த வைபவம் ஆகும்.

தொடர்ந்தும் மக்கள் நல்வாழ்வுக்கான பலவிரத பூஜைகளும், கல்யாணவைபவங்களும் ஆலய மண்டபத்தில் நிகழ்த்தப்பெற்று வருகின்றன. விநாயகப்பெருமானின் மணவாளக்கோலம் வருஷாபிஷேகம் 17-01-2003 வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதால் அத்தருணம் அடியார்கள் ஸ்ரீ சக்திகணபதியின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றார்கள்.

அத்துடன் ஆலயத்தில் யோகாசனம், இசை, மிருதங்கம், சமயநெறிப் பாடங்கள் ஆகியவகைளும் நடைபெறுகின்றன.


அடியார்கள் அனைவரும் ஸ்ரீ சக்தி கணபதியின் அருள் பெறுவோமாக!

**ஸ்ரீமதி. கு. சோமாஸ்கந்தசர்மா**
**குறொய்டன்**



## இங்கிலாந்திருந்து ஈழம்வரை பாயும் ஈலிங் கனகதுர்க்கை அம்மனின் அருளாட்சி !!

**SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
5 Chapel Road, London W13 9AE, *Charity No : 1014409*



கோயிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

## வடக்கு கிழக்கு மலையகத்திற்கு கடந்த 23 மாதங்களில் £116,053 பவுண்கள்

எமது தமிழீழத் திருநாட்டைப் பொறுத்த வரை பாரதியின் வாக்கு இன்று பலித்து விட்டது. ஈலிங் கனக துர்க்கையின் வாரி வழங்கும் கைகள் அவளது அடியார்களின் அளப்பரிய ஆதரவினால் நீண்டு வளர்ந்து கொடிய யுததத்தின் கோரப் பிடியில் சிக்கி பெற்றோரை இழநத எம் சிறார்களின் கண்ணீரைத் துடைக்கும் பணியில் தொடர்கிறது.

தொடரும் இப்பணியில் நாம் நேசக்கரம் நீட்டிய போதெல்லாம் அக்கரத்தைப் பற்றி போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்க உம் பணி என்று தோளோடு தோள கொடுதது உடல் மண்ணுக்கு உயிர எம் உடனபிறபபுக்களுக்கு என்று அர்ச்சனைத் தட்டுக்களா அவை அத்தனையும் எம் இள நெஞ்சங்களுக்கே என்று தட்டுக்களுக்கே தட்டுப்பாடு ஏற்படுமளவிறகு நீங்கள அள்ளி வழங்கியது யாவரும் அறிநததே.

நாம் செல்லும் இப்பாதை கரடு முரடானதாக இருந்தாலும் அன்னையின் அருளும் உங்கள் ஆதரவும் எம் கைகளுக்கு வலுவூட்டுகின்றன. ஆலயத்தின் செலவுகள் தவிர்நத வருமானதகின் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களின் பராமரிப்பிறகாகப பயன்படுத்தப்படுகின்றது என்ற எமது தாரக மந்திரத்திற்கு ஏற்ப நாம் இது வரை வழங்கிய நன்கொடைகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| (1) நவம்பர் 2000 - (35) டிசெம்பர் 2001 | **மொத்தம்** | | **£44,096** |
| 36. ஜன.பெப் 2002 | வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் மானிப்பாய் | 1,015 | |
| 37. | சைவ வித்தியா விருத்திச் சங்கம் யாழ்ப்பாணம் | 255 | |
| 38. | அன்பு இல்லம் திருகோணமலை | 375 | |
| 39. | சமூக நலன்புரி அமைப்பு களுவாஞ்சிக்குடி | 1,110 | |
| 40. | சிவானந்த தபோவனம் திருகோணமலை | 210 | |
| 41. மார்ச் ஏப்ரல் | தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மட்டக்களப்பு (அர்ச்சனைத்தட்டு விற்பனை மூலம்) | 1,020 | |
| 42. | அன்பகம் வவுனியா | 500 | |
| 43. | சமூக நலன்புரி அமைப்பு களுவாஞ்சிக்குடி | 1,500 | |
| 44. | இலண்டன் கனகதுர்க்கை அம்மன் இல்லம் மட்டக்களப்பு (காக்கும் கரங்கள) | 1,275 | |
| 45. | குருகுலம் சைவச்சிறுவர் இல்லம் கிளிநொச்சி | 825 | |
| 46. | ஸ்ரீ கணேசானந்த சேவாச்சிரமம் கிளிநொச்சி | 425 | |
| 47. | திலகவதியார் இல்லம் மட்டக்களப்பு (காக்கும் கரங்கள்) | 705 | |
| 48. | மலையகச் சிறுவர் இல்லம் (காக்கும் கரங்கள்) | 690 | |
| 49. | விபுலானந்த சிறுவர் பராமரிப்பு இல்லம் மட்.(காக்கும் கரங்கள,) | 60 | |
| 48. | அன்பகம் வவுனியா (காக்கும் கரங்கள) | 809 | |
| 49. | அன்பு இல்லம் திருகோணமலை (காக்கும் கரங்கள்) | 975 | |
| 50. | சிவானந்த தபோவனம் திருகோணமலை (காக்கும் கரங்கள) | 735 | |
| 51. | சைவ வித்தியா விருத்திச்சங்கம் யாழ் (காக்கும் கரங்கள்) | 795 | |
| 52. | ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் சிறுவர் இல்லம் யாழ்(கா.கரங்கள) | 165 | |
| 53. | சாந்தி சேவா சங்கம் (காக்கும் கரங்கள்) திருகோணமலை | 315 | |
| 54. | தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மட்டக்களப்பு | 500 | |
| 55. | ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் வவுனியா(கண் சத்திரசிகிச்சை) | 1,000 | |
| 56. | தமிழ் தகவல தொழில் நுட்ப ஒருங்கமைப்பு | 500 | |
| 57. | மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் | 500 | |
| 58. | தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முல்லைத்தீவு (அர்ச்சனைத் தட்டு விற்பனை மூலம்) | 2,045 | |
| 59. | அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சி | 9,000 | |
| 60. | குருகுலம் சைவச்சிறுவர் இல்லம் கிளிநொச்சி (80 சிறார்)ஏப்ரல் | 825 | |
| 61. | ஸ்ரீ கணேசானந்த சேவாச்சிரமம் கிளிநொச்சி (40 சிறார்)ஏப்ரல் | 425 | |
| 65. May 2002 | காக்கும் கரங்கள் திட்டம் | 4,410 | |
| 66. | குருகுலம் சைவச் சிறுவர் இல்லம் | 825 | |
| 67. | □ கணேசானந்த சேவாச்சிரமம் கிளிநொச்சி | 425 | |
| <u>பிணைதும் நிதிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுவதற்காக உள்ளன.</u> | | | |
| வைத்திய மாணவர் சங்கம் யாழ் பல்கலைக்கழகம் | | 750 | |
| யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை | | 1,000 | 1,750 |
| May 2002 மாதத்திற்குரிய மூன்றில் ஒன்றின் மீதி | | 1,611 | |
| April, 2002 மாதத்திற்குரிய மூன்றில ஒன்றின் மீதி | | 1,057 | |
| June 2002 மாதத்திற்குரிய மூன்றில ஒன்றின மீதி | | 2,453 | |
| June 2002 காக்கும் கரங்கள் திட்டம் | | 4,295 | |
| July 2002 மாதத்திற்குரிய மூன்றில ஒன்றின் மீதி | | 2,445 | |
| July 2002 காக்கும் கரங்கள் திட்டம் | | 5,110 | |
| August 2002 மாதத்திற்குரிய மூன்றில் ஒன்றின் மீதி | | 2,596 | |
| August 2002 காக்கும் கரங்கள் திட்டம் | | 5,050 | |
| AUGUST 2002 "Nதர." அர்ச்சனைத் தட்டு விற்பனை மூலம் | | 5,060 | |
| September 2002 மாதத்திற்குரிய மூன்றில் ஒன்றின் மீதி | | 1,771 | |
| September 2002 காக்கும் கரங்கள் திட்டம் | | 6,045 | |
| | **மொத்தம்** | | **£116,053** |

# காலிழந்த எனது
# கனவுகள் நனவாகுமா?

# ஊனமுற்ற குழந்தையாய்
# உருக்குலைந்து போவேனா?

ஈலிங் கனகதுர்க்கையம்மன்
ஈந்தருளும் சேவையினால்
தானமும் தருமமும்
தரணியெலாம் செழிக்கச்செய்யும்
மானமிகு இலண்டன் வாழ்
கனகதுர்க்கையம்மன் அடியார்களே!

**உங்கள் மனம்கனிந்து**
**உயிர்தவிக்கும் எனக்காக!**
**£50 பணம் வழங்கி**
**ஆதரவு தந்துதவி நின்றால்**

எனது துன்பங்களும் நீங்கி
நானும் சுகமாக வாழ்வேன் என்ற
நம்பிக்கையோடு
நாட்களை எண்ணுகின்றேன்?




**£50** per Leg

SPONSOR ONE TODAY

**Ealing Amman Temple, 0208 810 0835**

# குளிர்மையான ஒரு ஈழப்பயணம்

இம்முறை திருமலையில் உள்ள கிருஷ்ண பகவானது ஆலயம் பற்றிக் கூறலாமென்றுள்ளேன். சிறீ தட்சண கைலாசம் என்று கூறப்படும் கடலாலும் மலையாலும் சூழ்ந்துள்ள அழகிய திருமலை நகரின் மத்தியில் கம்பீரமாக பல ஆண்டுகளாக ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீமத் நாராயண பெருமாள் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இக்காட்சி



இணையற்றது. ஒவ்வொரு இனக்கலவரங்களின் போதும் பாதிக்கப்பட்ட திருத்தலம் இது. இறைவனுடைய திருவுருவங்கள் அடித்து உடைக்கப்பட்ட திருத்தலமும் இதுதான். இவ்வாலயம் எவ்வளவுதான் பாதிப்புக்களை அடைந்தாலும் பக்தப்பெருமக்கள் எப்போதும் உற்சாகம் கொண்டவர்களாக 1998 ஆம் ஆண்டு மீண்டும் இதனைப் புனருத்தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

பார்ப்பதற்கு மிகமிக ரம்மியமாக இருந்த ஆலயத்துள் நுழைந்ததும் மனதிலே ஒரு குளிர்வு உணர்வு உண்டானது. இதன் வரலாறு மிகமிகத் தொன்மை வாய்ந்ததாகும். இற்றைக்கு சுமார் 177 ஆண்டுகட்கு முன் அதாவது 1825 ஆம் ஆண்டில் இவ் ஆலயம் கட்டப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறிநிற்கின்றன. பாடல்பெற்ற பல தலங்கள் நிறைந்த நகரம். திருகோணமலை நகரின் நுழைவாயிலில் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது. திருகோணமலையில் எங்கு பார்த்தாலும் சைவ ஆலயங்களே இருக்கின்றன. இக் கிருஷ்ண ஆலயம் ஒன்று மட்டுமே வை ஷ்ணவ ஆலயமாக உள்ளது. இந்த ஆலயத்துக்கருகே வீரகத்திப் பிள்ளையார் கோவில் ஒன்றும் இருக்கின்றது. இந்த வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் தான் இக் கிருஷ்ண ஆலயம் கட்டப்பட்டுள்ளதாக சான்றுகள் கூறுகின்றன. இப்பெருமாள் கோவில் கருங்கல் திருப்பணியாகக் கர்ப்பக் கிரகமும் அர்த்தமண்டபமும், அழகிய தூபியும், சுற்றுமதிலும், அக்கிரகாரமும் கொண்டதாக மிக்க எழிலுடன் இவ்வாலயம் அமைந்துள்ளது.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சிபுரிந்த காலத்தில் அவர்களது காலாட்படைப்பிரிவில் வடஇந்தியர்களைக் கொண்ட பிரிவு ஒன்றும் இருந்தது. இவர்கள் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். இவர்கள் தங்களுக்கு ஒரு வழிபாட்டுத் தலம் வேண்டுமென்பதில் ஆவலாக இருந்தனர். இன்று பெருமாள் ஆலயம் அமைந்திருக்கும் பகுதிக்கு மேலாக கருடன் ஒன்று அடிக்கடி வட்டமிட்டதை இவர்கள் அவதானித்தனர். கருடனைப் பெருமாள் என்றும் அழைப்பதுண்டு. இதனால் அவ்விடத்தில் ஆலயத்தை அமைக்கும்படி பெருமாள் கேட்பதாக எண்ணி, வீரகத்திப் பிள்ளையார் ஆலயநிர்வாகிகளோடு கதைத்து அந்நிலத்தை வாங்கிப் பெருமாள் ஆலயம் அமைத்துவிட்டனர். இங்கு ஒரு விசேடம் என்னவென்றால் இப் பெருமாள் கோயிலுக்கு இந்தியாவிலிருந்துதானாம் கற்களைக் கொண்டுவந்தார்கள். திருமலையில் ஏராளமான கருங்கல்லுகள் இருக்கும் போது இந்தியாவிலிருந்து கற்கள் கொண்டுவருவதற்கான காரணம் என்னவென்று வினவியபோது ஒரு சுவையான காரணம் கூறினார்கள். இராம பக்தனான அனுமானால் இலங்கை எரிக்கப்பட்டதாம். இதனால் இலங்கையிலுள்ள கற்கள் சுடுபட்ட கற்களாம். அதனால்தானாம் இலங்கைக் கற்களை உபயோகிக்கவில்லை என்று கூறினார்கள்.

இந்த ஆலய அமைப்பு வரலாற்றில் ஒரு முக்கியமான அம்சத்தை நாம் அவதானிக்கவேண்டும். மதங்களுக்கிடையில் சமரசம் இல்லாதிருந்த அக்காலத்தில் திருமலையில் உள்ள சைவ ஆலய நிலத்தில் வைஷ்ணவ ஆலயம் எவ்வித பிச்சுப்பிசகும் இல்லாமல் உருவாக்கப்பட்டது. இது திருகோணமலையின்

ஒரு முக்கிய சிறப்பம்சமாகும். இக்காலத்தில் மதங்களைப் பிரித்துப் பார்த்துப் பிளந்து கொண்டிருப்பவர்கள் மேற்கூறிய நிகழ்வை தமக்கு முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். செல்வத்தை அள்ளித் தருபவர் கிருஷ்ணபகவான் என்கின்ற அசாத்திய நம்பிக்கை இங்குள்ள பக்தர்கள் மத்தியில் நிலவுகின்றது. இங்கே ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிடவிரும்புகின்றேன்.

உலக அழிவு பற்றி எதிர்வுகூறி அவற்றில் பல நடந்து நிரூபணமாகியும் உள்ளன என்பது யாவருக்கும் புரியும். இந்தத் தீர்க்கதரிசியின் பெயர் மிட்ச்சல் நாஸ்டர்டம் ஆகும். இந்தத் தீர்க்கதரிசி கூறியது போல் ஹிட்லர் தோன்றி அழிவுகள் செய்து மறைந்தான். சொன்ன நேரத்தில் கென்னடி சுடப்பட்டார். எதிர்வு கூறப்பட்ட பல யுத்தங்கள் நடந்தேறியுள்ளன. இவரால் இன்னுமொரு எதிர்வும் கூறப்பட்டுள்ளது. கிழக்கு நாட்டில் பிறக்கும் ஒருவன் உலகத்தில் புதிய யுத்தத்தை ஏற்படுத்துவான் இதனால் புதிய யுகம் ஏற்படும்.

கீதையிலும் உலகில் எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகின்றதோ அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக்கொள்கின்றேன் என்று கண்ணன் கூறுகின்றான்.

ஆக கல்கி அவதாரமாக அந்த கிழக்கு தேசத்து மனிதன் திருமலையில்தான் தோன்றியுள்ளானா என்ற வினாவுக்கு விடை எங்கே கிடைக்கும்?

மீண்டும் சந்திப்போம்

திருவருள் மு.நற்குணதயாளன்–

# உங்கள் பார்வையில்...

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

கடந்த இரு கலசம் இதழ்களின் தலையங்கம் கண்டேன். "எமது சமூகம் அங்கே தமிழ் வாழ்வதற்காக உயிர்த்தியாகம். இங்கோ உயிர்வாழ்வதற்காக தமிழ்த் தியாகம்!!" அருமையான வார்த்தைகள்! தமிழ்ப் பெற்றோர்கள் எப்போது விழிப்பார்கள்?

**ம.சதானந்தன்– Croydon**

திருமணக் கிரியைகள் பற்றிய விளக்கமான கட்டுரைக்கு நன்றி! இது போல் ஆலயக் கிரியைகளையும் எழுதி ஆலயங்களில் இலவசமாக வழங்கினால் பலரும் பயன் பெறுவார்கள் அல்லவா?

**திருமதி.ந.பார்த்தீபன்– Harrow**

கந்தபுராணத்தை இவ்வளவு எளிமையான முறையில் ஆங்கிலத்தில் தந்ததற்குப் பாராட்டுக்கள். என் குழந்தைகள் (வயது10–12) கலசம் வந்தவுடன் வாசிப்பது அதைத்தான்!

**திருமதி வி. செல்வேந்திரன்–Walthamstow**

குளிர்மையான ஈழப்பயணக் கட்டுரை மனதைக் குளிர்விப்பது மட்டுமல்லாது எமது பாரம்பரியப் பெருமைகளையும் வெளிக்கொணர்கிறது. இளைஞர்களுக்காக ஆங்கிலத்தில் நல்ல கட்டுரைகளை தருவது பாராட்டுக்குரியது. இங்குள்ள தமிழ் இளைஞர்களை கலசம் மூலம் ஒன்றிணைக்கப்பட்டால் தமிழும் சமய, கலாசாரங்களும் பேணப்பட வழிபிறக்கும்

**மு.ஜெயக்குமார்–EastHam**

**(கடிதம், தொலைபேசி, மின் அஞ்சல் மூலம் வரும் உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்)**

தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகை மாளிகை

# Ambaal Jewellers

## தமிழர் நகை மாளிகை

THE LEADERS IN 22CT GOLD JEWELLERY

ரூட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகாமையில்



மங்கள மங்கையரின் நகைகளுக்கு
தனி அழகு தரும் AMBAAL JEWELLERS
பளிச்சிடும் பசும்பொன். பார்ப்பவர்கள்
மனதைக் கொள்ளை கொள்ளும்
பத்தரை மாற்றுத் தங்க நகை அரங்கம்
AMBAAL JEWELLERS

ஆரவாரமில்லாமல்
வாடிக்கையாளர்களுக்கு நன்மையான
பணி செய்வதே நமது நோக்கம்

மலிவின் மறு பெயர்

## அம்பாள் ஜூவலர்ஸ்

திருத்த வேலைகள் உடனுக்குடன் கவனிக்கப்படும். பொன்னுருக்கலுக்கான வசதிகள் செய்து தரப்படும்.

உங்கள் எண்ணம் போல் வண்ணம் கொண்ட
ஆபரணங்கள் அணி வகுக்கும் அழகான தங்க நகைச் சோலை


ஏழு நாட்களும் திறந்திருக்கும்

## அம்பாள் ஜூவலர்ஸ்

176, Upper Tooting Road, London SW17 7ER.

Tel: 020 8672 9955 Fax: 020 8672 7097

web:ambaaljewellers.com E-mail: sales@ambaaljewellers.com





சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 03.01. 2003 அன்று வெளியிடப்பட்டது.